நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி - 6
தொகுதி - 111
திருவள்ளுவர் ஆண்டு - 2047

திங்கள் இதழ்
விலை ரூ. 20
ஜூன்- 2017




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி
## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறிஞர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.பாலகிருஷ்ணன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. இதழ் மணம் 4

2. சிலப்பதிகாரப் புதையல்கள் - 'கிழவர்' இளங்கோ 6
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள "செய்யுளியல்" உரை
பேராசிரியர் ப.மருதநாயகம் (சென்ற இதழின் தொடர்ச்சி) 11

4. இருவகைச் செய்து வாய்ப்பாட்டு வினைகள்
பேராசிரியர் இரா.கோதண்டராமன் 17

5. இன்னா செய்யாமை
பேராசிரியர் மு.மணிவேல் 27

6. தமிழில் ஒப்பியல்-இலக்கிய, இலக்கண ஆய்வுகள்
முனைவர் உ.கருப்பத்தேவன் 31

7. சங்கச் செய்திகள் 40



வலைதளம்: www.maduraitamilsangam.com
: www.senthamilcollege.com
மின்னஞ்சல்: maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

# இதழ் மணம்

தமிழறிஞர் இரா.இளங்குமரனார், *"சிலப்பதிகாரப் புதையல்"* என்னும் தலைப்பில் சிலப்பதிகாரம் குறித்த கட்டுரைத்தொகுதி தொடர்ந்து வரும். இளங்கோவடிகள் நிறைநாட் செல்வராக வாழ்ந்த அரிய பெரிய வாழ்க்கையை ஆசிரியர் ஆய்வு செய்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது. சேரநாட்டின் முதற்குடிமகனாராக வாழ்ந்த இளங்கோ, கபிலர், பரணர் போன்ற கல்வியாளர் விட்டுச் சென்ற கல்வி சார்ந்த அறிவுச் செல்வத்தைப் பெற்றிருப்பார். இளங்கோவடிகள் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வித்தகர். கலைச் செல்வம் அனைத்தும் அறிந்த பெரும் புலவர். அவரிடம் மாணவர் பலர் இருந்திருக்கக் கூடும்; அவர்கள் இவரிடம் பாடம் கற்ற காலத்தில் குறிப்பு எடுத்திருக்கலாம். மேலைநாடுகளில் கி.மு. நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் பாடம் கற்ற மாணவர்களுடைய கல்வி சார்ந்த குறிப்புக்கள் பல நூற்றாண்டுகள் கழித்தும் கண்டெடுக்கப்பட்டு பாதுகாத்துத் தங்கள் அறிவுச் செல்வத்தை வளப்படுத்திக் கொண்டனர். நம்மவர்கள் சமயம் சார்ந்த போர்களில் ஈடுபட்டு மதமாச்சரியங்களால் ஏடுகளை அழித்து விட்டனர்; அதனால் வாழையடி வாழை என வளர வேண்டிய கல்விச் செல்வம் வளர்த்து எடுக்கப்படாமல், பாதுகாப்பு இன்றி அழிந்துவிட்டன. நமக்கும் தமிழ்க்கல்வி இருந்தது என்பதைக் காட்டும் வகையில் ஒரு சிறிய நூல் தொகை தான் கிடைத்தது என்று எண்ணி இரங்க வேண்டியுள்ளது. அழிந்த கல்விச் செல்வம் எவ்வளவோ? இயற்கைச் செல்வம் தன் இயல்பில் தன்னைப் பாதுகாத்துக்கொள்கிறது. அறிவுச் செல்வம் தக்க பயிற்சியும் ஒழுக்கமுடைய அறிவுடைய சமுதாய முயற்சியால் பாதுகாக்கப்படுகிறது. அத்தகைய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இதுவே பேரறிஞர் இளங்குமரனார் கட்டுரை வழங்கும் செய்தியாகும்.

பேராசிரியர் மறைமலை இலக்குவனார் *"வாழிய பெரும"* எனத் தமிழறிஞர் இளங்குமரனாரை வாழ்த்தும் கவிதை இடம் பெறுகிறது. நாமும் பேராசிரியரோடு சேர்ந்து பாடி மகிழ்ந்து வாழ்த்துவோம். வாழிய பெரும!

சென்ற இதழின் தொடர்ச்சியாகப் பேராசிரியர் ப.மருதநாயகம் எழுதிய *"நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள செய்யுளியல் உரை"* என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. அவர்கள் அரிதின்முயன்று காலங்காலமாகத் தமிழறிஞர்கள் *"செய்யுளியலுக்கு நச்சினார்க்கினியர் உரை"* என்று சொல்லி வந்த வழக்கு உண்மைக்குப் புறம்பானது என்பதைச் சான்றுகளோடு எடுத்துரைக்கும் திறம் அறிஞர்கள் சிந்தனைக்குரியது.

பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் தமிழ் முழுதும் அறிந்த சான்றோர். அப்பெருமகனார் இக்கட்டுரைக்குத் துணை நிற்பது கண்டு இன்புறத்தக்கது. அவர்கள் ஏற்கனவே உழுதசால்; புலம் சரியாகத் திருத்தம் செய்யப் பெறாததால் உண்மை புலப்படவில்லை. பேராசிரியர்.ப.மருதநாயகம் எதனையும் உற்று நோக்கும் கூர்த்தமதியினர். உண்மை காணும் இயல்பினர். பேராசிரியர் பெயரில் இருந்த நிலத்தை

வேறு பெயரில் மாற்றிய சிறுமை கண்டு துணிந்து வெளிப்படுத்திய வழித்தோன்றல். தம்முன்னோர் சென்ற வழியைப் புதுக்கிய பெருமை வெள்ளைவாரணனாருக்கும் பேரசிரியர் ப.மருதநாயகம் அவர்களுக்கும் உரிய தனித்தன்மையாகும்.

பேராசிரியர் ப.மருதநாயகம் அமெரிக்க நாட்டின் தலைசிறந்த ஆர்வர்டு பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆய்வு மையத்தின் அழைப்பின் பேரில் சென்று திரும்பியுள்ளார்கள். செவ்வியல் இலக்கியம் குறித்து அங்கு விரிந்து ஆய்வு நடைபெறுகிறது. பேராசிரியருக்கு மதுரை நான்காம் தமிழ்ச்சங்கமம், செந்தமிழும் தன் வாழ்த்தைத் தெரிவித்து மகிழ்கிறது.

*"இரு வகைச் செய்து வாய்பாட்டு வினைகள்"* என்னும் தலைப்பில் பேராசிரியர் இரா.கோதண்டராமன் எழுதியுள்ள கட்டுரை இடம் பெறுகிறது. *தமிழில் செய்து வாய்பாட்டுப்* பொது வினைமுற்றுக்கள் இறந்த காலத்தையும், இறவாக் காலத்தையும் குறிப்பது குறித்து அவற்றின் உள் கட்டமைப்பைத் தொல்காப்பியம், செவ்வியல் தமிழ் கொண்டு விளக்குகிறார். வழக்கில் பயின்று வரும் மொழி அமைப்பையும் திராவிட மொழியில் கன்னடத்தில் அவை பயின்று வருவதையும் ஆசிரியர் அரிதின் முயன்று விளக்கியுள்ளார். ஆசிரியர், *மாணவர்கள்* இதுபோன்ற கட்டுரைகளை *முன்வைத்துக் கல்லூரிகளில்* மொழியியல்பட்டறை ஏற்பாடு செய்து பேராசிரியர் இரா.கோதண்டராமன் போன்ற கல்வியாளரை அழைத்துப் பயன் பெறலாம். வெற்று ஆரவாரம் மிக்க கூட்டங்களுக்குச் செலவு செய்வதைவிட மாணவர் ஆசிரியர்களுக்குப் பயன்படும் கல்வி சார்ந்த மழுநேர மொழி சார்ந்த இலக்கணச் செய்திகளைப் பெரியவர்களோடு பகிர்ந்து கொள்வதற்குரிய கருத்துப்பட்டறைகளை அமைத்து கல்வியாளர்களைச் சந்திப்பதற்கு கல்லூரித் தலைவர்கள் உதவலாம்.

பேராசிரியர் மு.மணிவேல் *"இன்னாசெய்யாமை"* என்னும் தலைப்பில் இனியது செய்து இன்புறுக என்னும் செய்தியை இனிய எளிய நடையில் கற்று இன்புறும் வகையில் எழுதியுள்ளார். அவர் மாணவர்களுக்குப் பாடம் சொல்லுவது போன்ற நடை அமைதியோடு கட்டுரையை அமைத்துள்ளார்; சான்றோர் அன்பைப் போற்றுகின்றனர்; அன்பின் அருமை அறியாதவர் தீமை செய்து துன்புறுகின்றனர் என்னும் செய்தியை ஆசிரியர் கூறும் முறை இனிது. உலகம் ஏன் போர்க்களமாக இருக்கின்றது? பள்ளிக்குச் செல்லும் குாந்தைகளும் வீட்டுப்பொருள் வாங்கக் கடைக்குச் செல்லும் உழைக்கும் மக்களும் பலியாகின்றனரே? கலகத்து அரக்கர் பலர் கருத்தினுள்ளே புகுந்துவிட்டார்.

தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வுகள் குறித்துப் பேராசிரியர். உ.கருப்பத்தேவன் கட்டுரை இடம் பெறுகிறது. பேராசிரியர் கருப்பத்தேவன் மதுரைப்பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கியத் துறைப் பேராசிரியர். அவர்கள் ஒப்பிலக்கிய ஆய்வு குறித்து விரிவான செய்திகளை மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து அளித்துள்ளார். நிறைந்த செய்திகளை இனிய நடையில் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழிய பெரும! வண்டமிழ் போன்றே!

புலவர்மணி முதுமுனைவர். இளங்குமரனார்க்கு வாழ்த்து

*பளிங்கெனத் துளங்கிடும் பண்புசால் உள்ளம்;
உளங்கவர் முறுவல் விளங்கிடும் திருமுகம்;
தமிழ்நலன் காத்தல் தம்கடன் என்றே
தளரா துழைத்திடும் தறுகண் உறைவிடம்;
மறைமலை யார்போல் நிறைவுறு புலமை;
பாவாணர் நெறியில் ஓய்வில ஆய்வு;
இலக்குவர் வழியில் இயங்கிடும் தமிழ்மறம்;
இனம், மொழி பேணிட இன்றமிழ் மக்களை
எழுச்சி கொளச் செய உலகெலாம் பயணம்;
ஆய்வுச் செல்வத்தை அனைவரும் துய்த்திட
நூல்பல இயற்றிடும் நுண்மாண் நுழைபுலம்;
மாணவர் தம்மை மதிப்புடன் போற்றி
ஆற்றுப் படுத்திடும் எங்கள் ஆசான்;
இளங்குமரனார் பெருமை இயம்பிட
இயலுமோ எம்மால் இயம்பிடுவீரே!
பகுப்பாய்வு நோக்கில் இவர் பரிமேலழகர்;
நூல்நலன் நுவல்வதில் நச்சினார்க்கினியர்;
அருங்கலை அறிவில் அடியார்க்கு நல்லார்;
தெளிவுறப் புகல்வதில் தெய்வச் சிலையார்;
மேடை மேவிடும் மென்றமிழ்த் தென்றல்;
தமிழ்ப்பகை சாடிடும் நக்கீர நெருப்பு;
மூச்சும் பேச்சும் தமிழெனக் கொண்டு
எண்ணும் எழுத்தும் தமிழ்க்கென ஆக்கி
எமக்குத் தலைவராய் இலங்கிடும் அறிஞரே;
கொள்கை இமயமே! பல்கலைக் கொண்டலே!
அறிவுக் கடலே! அருங்குணப் பொதியிலே!
பல்லாண்டு பல்லாண்டு பாடி வணங்கினோம்!
பண்புளோர் சொல்லாய் பாவலர் பொருளாய்
வள்ளுவன் மறையாய் காப்பியன் நூலாய்
உலகெலாம் போற்றிட வாழி! ஊழி!
வாழ்த்தி மகிழ்கிறோம்! வணங்கிப் புகழ்கிறோம்!
வாழிய பெரும! வண்டமிழ் போன்றே!*

***மறைமலை இலக்குவனார்***
52/3, சௌந்தரியா குடியிருப்பு,
அண்ணாநகர் மேற்கு, சென்னை–600101.

# 2 சிலப்பதிகாரப் புதையல்கள்
## 'கிழவர்' இளங்கோ

முதுமுனைவர். ***இரா.இளங்குமரனார்***

இளங்கோவடிகள் தமிழ்க் காப்பியங்களின் தந்தை ஆவார். முதற்காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை இயற்றினாலும் பின் வந்த காப்பிய நூல்களுக்கு இலக்கணமாக அமையும் சிறப்புப் பெற இயற்றினார். இளங்கோவடிகள் கொண்டிருந்த புலமையையும், பட்டறிவு முதிர்வையும் அவர் தம் சிலம்பு செவ்வனே தெரிவிப்பதாக இருக்கின்றது. மேலும், தமிழர் எழுத மறந்ததான *'தம் வரலாறு'* இளங்கோவடிகளாலே தான் முதற்கண் எழுதப்படுகின்றது. ஆதலின், *"தம் வரலாற்றின் தந்தை"* என்றும் இளங்கோவடிகளைக் குறிப்பிடலாம். இவ்விளங்கோவடிகள் சிலம்பு எந்த அகவையில் எழுதத் தொடங்கினார் என்பது குறித்து இக்கட்டுரையில் ஆராய்வோம்.

*இளங்கோ என்றவுடன் நம் மனக்கண்முன்* இளமை தான் வந்து நிற்கின்றது. அவ்விளமைக் கோலந்தான் இளங்கோவடிகள் நூல் யாக்கப் புகுந்த கோலமா எனின் காண்போம். இமயத்தை எல்லையாகக் கொண்டு ஆண்ட நெடுஞ்சேரலாதன் பெற்றெடுத்த மக்கள் இருவர். அவருள் மூத்தவன் செங்குட்டுவன்; இளையவர் இளங்கோ! ஒரு நாள், மக்கள் இருவரும் பக்கத்தே இருக்க, சேரலாதன் அரியணையிலே அமர்ந்திருந்தான். அதிகாலையில், நிமித்தம் வல்லான் ஒருவன் அவ்விடத்தை அடைந்தான். அவன் இளங்கோவைக் கூர்ந்து நோக்கி *"இவ்விளையவனே அரசாளும் இலக்கணம் அனைத்தும் அமையப் பெற்றுள்ளான்; ஆதலால் இவனே அரசனாவதற்கு உரியன்"* என்றான். இச்சொல்லைக் கேட்ட இளங்கோவின் முகம் மாற்றம் உற்றது. நிமித்திகனை வெகுண்டு நோக்கி *"மூத்தவன் இருக்க இளையவனே ஆள வேண்டும் என்று முறைகெடக் கூறினை; உன் கூற்றைப் பொய்யாக்குமாறு இப்பொழுதே துறவு கொள்கின்றேன்"* என்று துணிந்தார். அப்படியே நடத்திக் காட்டினார்.

இளங்கோ துறவு கொள்ளும் நேரத்தே செங்குட்டுவன் ஆட்சி ஏற்கத் தக்க ஆண்டினனாக இருந்தான். அவனுக்கு நேர் இளையவர் இளங்கோ! செங்குட்டுவனுக்கு நேர்ந்த துயரத்தைக் குறிப்பால் அறியும் திறம் இளங்கோவடிகளுக்கு இருந்தது. அத்துயரை மாற்றியமைக்கத் தக்க எண்ணம் நொடிப் பொழுதில் தோன்றியது. இவற்றை நோக்குங்கால் செங்குட்டுவனுக்கு அகவை பதினாறும், இளங்கோவுக்கு அகவை பன்னிரண்டும் ஆகவாவது இருந்திருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வரலாம்.

இஃது ஒருபுறம் இருக்க, பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடிய புலவர்களில் ஒருவர் ***பரணர்*** ஆவர். அவர் பொய்யா நாவிற் பரணர் என்று கொண்டாடப் பெறும் புகழாளர். அவர் செங்குட்டுவனது வரலாற்றைப்

*பதிற்றுப்பத்தில்* குறிப்பிடுகின்றார். சேரன் மேல்கடலிடைக் கொண்ட வெற்றியும், மோகூர் மன்னன் முரசங் கொண்ட வெற்றியும் அவரால் குறிக்கப் பெறுகின்றன. வடநாடு சென்று பத்தினிக்குக் கல்கொண்டு வந்த வரலாறு அவரால் குறிக்கப் பெறவில்லை. அன்றியும், பிற்கால வாழ்வில் செங்குட்டுவன் கொண்ட வெற்றிகளும் குறிக்கப் பெறவில்லை. பரணர் பாடிய பாடல்கள் பதிற்றுப்பத்தினை அன்றி வேறு சில தொகை நூல்களிலும் உள, அங்கெல்லாம் பெரும் வரலாறுகளைச் சுட்டிச் செல்லும் அவர், செங்குட்டுவன் பிற்பகுதி வரலாற்றின் நிகழ்ச்சிகள் நடந்த போது இருந்திருப்பாராயின், அவற்றைக் கூறாது விட்டுச் சென்றிருக்க மாட்டார். ஆதலால் பரணர் செங்குட்டுவனது முற்பகுதி வரலாற்றையே தாம் பாடிய பாடல்களில் குறித்தவர் ஆகின்றார்.

இளங்கோவடிகள் தம் நூலில் ஒரு காண்டத்தைச் சேரனுக்கு உரித்தாக்குகின்றார். அங்கே தான் செங்குட்டுவன் வடநாடு சென்று கற்புத் தெய்வத்திற்குக் கல் கொணர்ந்த வரலாறு கூறப்படுகின்றது. இளங்கோவடிகளோ ஆய்ந்து தெளிந்து அளவோடு கூறுபவர். ஆதலின், தம் நூலுக்கு ஏற்ப வடவர் போரையும், அதன் வெற்றியையும் கல்லெடுப்பையும் விரியக் கூறினார். எஞ்சிய போர்களைச் சுருக்கிக் காட்டினார். இதனால் செங்குட்டுவன் வரலாற்றின் ***முற்பகுதி பரணராலும், பிற்பகுதி இளங்கோவடிகளாலும்*** குறிக்கப் பெற்றது எனலாம். இஃது இவ்வாறிருக்க, ஒவ்வொரு பத்திற்கும் பதிகம் என ஒன்று பதிற்றுப்பத்தைத் தொகுத்தோரால் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளது. அதனை எழுதியவர், வரலாறும் கால உணர்வும் தெளிய அறிந்தவர் என்பதை அவர் குறிப்புக்கள் அறியச் செய்கின்றன. பதிற்றுப்பத்து கூறும் சேர அரசர்கள் அத்தனை பேரின் ஆட்சியும் முடிந்த பின்னர் அவர் தக்க சான்றுகளைக் கொண்டு முறைபெறப் பதிகம் பாடியிருக்க வேண்டும். இவ்வாறு பாடப்பெற்ற பதிகங்களில் ஒன்றே ***ஐந்தாம் பத்துப்பதிகமாகும்.*** அப்பதிகம், செங்குட்டுவன் நடத்தியதாகப் பரணர் கூறும் போர்களையும், அதற்கு மேல் அவன் நடத்திய போர்களையும் இளங்கோவடிகள் குறிப்பிடும் வடநாட்டுப் போரையும் சேர்த்துத் தொகுத்துக் குறிப்பிடுகின்றது. அதில்,

> ***"கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்***
> ***கானவிற் கானம் கணையிற் போகி***
> ***ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை***
> ***இன்பல் அருவிக் கங்கை மண்ணி"***

என்னும் பகுதி குறிப்பிடத் தக்கதாம்.

மற்றும், நமக்குத் துணையாகும் நல்லதொரு குறிப்பையும் அப்பதிகம் தருகின்றது. *"கடல் பிறக்கோட்டிய* செங்குட்டுவன் *ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்"* என்பதே அது. வாழ்ந்தது ஐம்பத்தையாண்டு அல்ல. அவன் வீற்றிருந்தது–அரியணையில்

வீற்றிருந்தது-- ஐம்பத்தையாண்டு! இந்த ஆண்டினை வாழ்வுயாண்டு எனக் கருதக் கூடாதோ எனின், பதிற்றுப்பத்தின் வேறு சில பதிகங்களில் ***"பதினாறாண்டு வீற்றிருந்தான்", "பதினேழியாண்டு வீற்றிருந்தான்"*** என்று வருவனவற்றால் ஒவ்வாமை அறிக. அன்றியும் கல்லெழுத்துக்களிலே காணப்பெறும் காவலர் ஆண்டுகள் ஆட்சியாண்டாக இருக்கும் உண்மையும் தெளிக. ***வாழ்ந்ததை வீற்றிருத்தல்*** என்னும் வழக்கின்மையும் காண்க!

இங்குக் கூறியவற்றால் செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டுகள் ஆட்சி செய்ததாகக் கொள்ள வேண்டுவது உண்மையாவதாலும், அவன் பதினாறாம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பேற்று இருக்கக் கூடும் எனக் கருதுவதாலும் எப்படியும் செங்குட்டுவன் *எழுபது ஆண்டுகட்குக் குறைவுபடாமல் வாழ்ந்திருந்தான்* என்பது தெளிவாம். மேலும் அவன் பிற்பகுதி வாழ்விலே நிகழ்ந்ததுதான் வடநாட்டுக் கற்கோள் செலவு என்பதை ஒரு வழியால் ஆராய்வோம்.

சேரனது முற்பகுதி நிகழ்ச்சியாயின் மிக உயர்ந்ததான இச்செயலைப் பரணர் கூறாது விட்டுச் சென்றிருக்க மாட்டார் என்பது உறுதி. இது நிற்க; வடநாடு சென்று கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சிமா நகர் வந்து சேர்ந்த செங்குட்டுவன், ஆடல் பாடல்களில் மகிழ்ந்து அரியணையில் அமர்ந்திருந்தான். அதுபோழ்து நீலன் என்னும் ஒற்றர் தலைவன் வந்தான். நீலனோ, தமிழர் தம் ஆற்றலை இகழ்ந்த கனகவிசயரைச் சேரன் ஆணைப்படி, பாண்டிய, சோழ வேந்தர்க்குக் காட்டிவரச் சென்றவன். அவன், பார்த்திபர் இருவரும் *"தோற்றோடியவரைச் சிறை செய்து வந்த வெற்றி போலொரு வெற்றி கண்டிலேம்"* என்று கூறிய இழிமொழியைக் கொண்டு வந்து சேரனிடம் சேர்த்தான். அதனால் செங்குட்டுவன் சீற்றமுற்றுச் சோழ பாண்டியர்களுடன் போரிட எழுந்தான். அது போழ்து அருகில் இருந்த மாடலன் என்னும் மறையோன்.

> ***"வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு***
> ***ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்***
> ***அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்***
> ***மறக்கள வேள்வி செய்வோ யாயினை"***

என்றான். இவன் கூற்றால் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்டபொழுது, ஆண்டு--வையங்காவல் பூண்ட ஆண்டு--*ஐயைந்திரட்டி* (ஐம்பது) ஆகிவிட்டது. முன்னரே பதினாறு இளமையில் செங்குட்டுவன் ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கக் கூடும் எனக் கருதிக் கொண்டு விட்டபடியால், இப்பொழுது 66 யாண்டுகள் ஆக வேண்டும்.

செங்குட்டுவன் வடநாடு சென்று இமயத்தில் கல் எடுத்துக் கங்கைக் கரைவர *"எண்ணான்கு மதியம்"* ஆகின்றது. அதன் பின்னர் சில திங்கள் செலவிட்டே வஞ்சி வந்தடைந்திருக்கக் கூடும். ஆகலின்

செங்குட்டுவன் வடநாட்டுச் செலவுக்கு மூன்று யாண்டுகளேனும் செலவிட்டு இருக்கலாம். ஆதலால் தனது 63ஆம் ஆண்டில் குன்றக் குறவர்களாலும், புலவர் சாத்தனாராலும் தன் தம்பி இளங்கோவுடன் இருந்து கண்ணகி வரலாற்றை அறிந்து கொண்டான் செங்குட்டுவன். அப்பொழுது இளங்கோவடிகள் அகவை 59ஆக இருத்தல் வேண்டுமன்றோ!

இமயக் கல்கொண்டு வந்த பின்னர் கண்ணகியார் கோயில் கட்டவும், திருச்சுற்றெடுக்கவும், நடுகல் விழா நடத்தவும், அண்டை நாட்டு வேந்தர்களுக்கும், அயல்நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பி வரச் செய்ததற்கும் ஆண்டுகள் சில கடந்தன. பதிற்றுப்பத்துப் பதிக ஆசிரியர் கூறியவாறு செங்குட்டுவனது 55யாண்டு ஆட்சியில் எஞ்சியிருக்கும் ஐந்தாண்டுகளையும் இப்பணியிலே செலவிட்டான் என்று உறுதி செய்யலாம்.

தமது ஐம்பத்தொன்பதாம் ஆண்டிலே குன்றக்குறவர் கூறிய கண்ணகியார் வரலாற்றையும், அதனை விளக்கிக் கூறித் தூண்டியும் வேண்டியும் நின்ற சாத்தனார் கூற்றையும் உளத்தே தேக்கி ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் எண்ணி எண்ணித் திளைத்த அடிகள் அதன் பின்னரே தம் புலமைச் செறிவும் கலைநலமும் திகழ முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பை இயற்றினார் ஆதல் வேண்டும்.

கண்ணகியாரின் வரலாற்றைக் கேட்டவுடனே அடிகள் நூல் தொடங்கிப் பாடியிருக்கக் கூடாதோ எனின் சாத்தனார் வரலாற்றை அடிகளிடம் கூறும் இடமே, வரலாற்றின் வேறொரு திருப்பத்திற்கு உரிய இடமாக அமைந்தது. உடனே எப்படிப் பாடத் தொடங்க முடியும்? மேலும் இலக்கியம் நாட் குறிப்பா? அவ்வாறு இருக்குமாயின் கண்டவுடனோ கேட்டவுடனோ குறித்துவிட முடியும். குறிக்கவும் வேண்டும். சீரிய காப்பியம் பாடத் தொடங்குவோர் அதன் முடிநிலை தெளிந்தன்றித் தொடங்குதல் இயல்பு இல்லை. அன்றியும் சிலம்பினைச் சிறிது நோக்கிப் பார்ப்பினும் வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகள் பல, புகார் மதுரைக் காண்டங்களிலே சுட்டப் பெறுவதை உணரக் கூடும். ஆகலான் வரலாறு அனைத்தும் நிகழ்ந்த பின்னரே தான் அடிகள் சிலம்பு பாடத் தொடங்கினார் என்பது தெளிவாம்.

ஆகையால் பன்னாட்டு வேந்தரும் பாராட்டுமாறு செங்குட்டுவன் *சிலைக் கோயில்* எடுத்து வழிபாடு செய்த பின்னரே அடிகள் *கலைக்கோயிற்* பணி தொடங்கினார். அப்பணி தொடங்கும் காலையில் அடிகட்கு அகவை ஏறக் குறைய 67ஆக இருத்தல் வேண்டும். காப்பியம் எழுதவும், அரங்கேற்றம் செய்யவும் மேலும் சில பல ஆண்டுகளைச் செலவிட்டு நிறைநாட் செல்வராய்ப் பெருவாழ்வுற்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகும்.

# நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள "செய்யுளியல்" உரை

பேராசிரியர் **ப.மருதநாயகம்,**
ஆய்வு அறிஞர், நடுவண் அரசு,
செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
100 அடிசாலை, தரமணி, சென்னை–600 113
கைபேசி :94427 87727

## சென்ற இதழின் தொடர்ச்சி :

சில நூற்பாக்களுக்குத் தவறான பொருளும், மேலும் சிலவற்றிற்குத் தெளிவற்ற உரையும் தரப்பட்டுள்ளதால் அவை நச்சினார்க்கினியரால் எழுதப்பட்டவையாயிருக்குமா என்ற ஐயத்தை வெள்ளைவாரணனாரே எழுப்பக் காணலாம்.

"*அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே*" (எண்.34)

எனும் நூற்பாவிற்குப் பேராசிரியர், "மாத்திரை முதலிய மற்றை உறுப்புக்களான் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்றானும், இத்துணை அசையும் சீரும் தொடையும் கொண்டது செய்யுளென்றானும் அளவியல் கூறிய உறுப்புக்களான் வரையறுக்கப்படா. அடியளவே கூறச் செய்யுட் புலப்பாடாமென்பது" என்று விளக்கம் தந்திருக்க, அவ்வுரையைத் தழுவி இந்நூற்பாவிற்கு விளக்கம் எழுதியுள்ள நச்சினார்க்கினியர் அவ்விளக்கத்திற்கு மாறாக, "*அடியின் பாட்டே சிறப்பெனப்படுமே*" எனப் பொருள் தெளிவின்றி எழுதியிருப்பாரா என்பது ஆராயத்தக்கது. (ப. 179)

"*அசைகூன் ஆகும் அவ்வயின் ஆன*" (எண். 46)

எனும் நூற்பாவை விளக்கி, அதற்குச் சான்றுப் பாடல்களாக,

"*வான், வலந்தர மறுப்பட்டன*"
"*அடி, அதர் சேறலின் அகஞ்சிவந்தன*"
"*வண்டு, மலர் சேர்ந்து வரிபாடின*",
"*களிறு, கதவெறியாச் சிவந்துராய்...கூற்றுப் போன்றன*"

என்பனவற்றைப் பேராசிரியர் தருவார். இச்சான்றுப் பாடல்களையே தரும் நச்சினார்க்கினியர் உரையில் இறுதிப் பகுதி "களி***றே*** கதவெறியாச் சிவந்துராஅய்" என நான்கசை கூனாயிற்று; களிறே என்ற ஏகாரம் அசையாதலின் பொருளின்றி நின்றது என்று காணப்படுகிறது. இதற்கான அடிக்குறிப்பில் "*களிறு என்று இருத்தல் வேண்டும்; இத்தொடர் பின் வந்தோரால் சேர்க்கப் பெற்றிருக்க வேண்டும்*" என்று வெள்ளைவாரணனார் தெளிவுபடுத்துவார். (ப. 215)

*"அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு*
*நெறிபெற்று வருஉம் நேரடிமுன்னே"* (எண்.61)

எனும் நூற்பாவிற்குப் பேராசிரியர் "நாற்சீரடிக்கு முன்னும் பின்னும் *அறுசீரடியும் வருதலும் உண்டு. அன்னது வருங்கால் தனக்குரிய* வெண்டளையேயன்றி ஆசிரியத் தளையொடும் வழக்குப் பெற்று நடக்கும் கலிப்பாவினுள்'' என்று உரை வரைவார். நச்சினார்க்கினியர் உரையில், *"வரைபுரை திரைபோழ்ந்து மணநாறு நறுநுதல் பொருட்டு வந்தோய்"* என ஆசிரியத்தளையானும் அறுசீரடி வந்தது கட்டளையன்றேற் றளை யென்றதனை நாற்சீரடிக்குத் தளைகோடலின் றென்றார்; இவற்றிற்குத் தளை வரையறையின்று. இவற்றைப் பின்னுள்ளோர் இனமென்பர்'' என்று காணப்படுகின்றது. இவ்வுரைப்பகுதி தெளிவில்லாமலிருப்பதால் இதன் பொருள் நன்கு விளங்கவில்லை என்று வெள்ளைவாரணனார் குறிப்பிடுவார். (ப.317)

*"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே*

........................................................................................

*யாப்பின் வழிய தென்மனார் புலவர்"* (எண். 75)

என்னும் நூற்பாவில் வரும் *'நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்'* என்னும் தொடருக்குப் பொருள் தரும் பேராசிரியர் "தமிழ் என்ற அளவில் முத்தமிழும் கொள்ளப்படுமாறு போன்று, நாற்பெயர் எல்லையகம் என்ற அளவிலேயே தெற்கே குமரியும், வடக்கே வேங்கடமும், கிழக்கும் மேற்கும் கடலும் எல்லையாகவுடைய தமிழ்நாடு என்பது தானே பெறப்படும் என்பதாம்'' என்று அருமையாக விளக்குவார். நச்சினார்க்கினியர் உரையில் *"நாற்பெயரெல்லை"* என்ற தொடருக்கு, *"மலை மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், தொண்டை மண்டலம்"* என்னும் நான்கு பெயரையுடைய தமிழ்நாடு என்று பொருள் தரப்பட்டுள்ளது.

இவ்வுரையில் கூறப்படுவது போல் தமிழ்நாடு நான்கு மண்டலங்களாக வழக்கிலும் செய்யுளிலும் குறிக்கப்படாமையானும் *'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'* என்று தொல்காப்பியர் தமிழகத்தைப் பொதுப்பட மூன்று பகுதியுடையதாகவே குறிப்பிடுவதாலும் *'நாற்பெயர் எல்லை அகத்தவர்'* என்ற தொடர்க்கு நச்சினார்க்கினியர் உரையில் உள்ள பொருள் பொருத்தமுடையதன்று.(ப.361)

*"அங்கதந் தானே அரில் தபத் தெரியின்*
*செம்பொருள் கரந்த தென இரு வகைத்தே"* (எண்.120)

எனும் நூற்பாவிற்கு உரைவரையும் பேராசிரியர் *"கொடை மடங்கூறுதல் வசை போன்று புகழ்தல் ஆகுமாதலால் அது அங்கதமாகாது"* என்று அரிய விளக்கமொன்று தருவார். *"கொடை மடம் படுதல் அல்லது* என்பது வசை போன்று புகழ். இது செம்பொருளின் பாற்படும்" என்று நச்சினார்க்கினியர் உரையில் விளக்கம் காணப்படுகிறது. *'இது செம்பொருளின் பாற்படும்'* என்று உரையிடையே காணப்படும் தொடர் நச்சினார்க்கினியர் எழுதியது அன்று (ப.615) என்று வெள்ளைவாரணனார் சுட்டிக் காட்டுவார்.

> ***"இடை நிலைப் பாட்டே***
> ***தரவகப் பட்ட மரபின என்ப"*** (எண். 130)

என்னும் நூற்பாவிற்குப் பேராசிரியர் *'தரவின் அகப்பட்டது தாழிசை'* என்று கூறிச் சான்றுப் பாடல்கள் பல தருவார். செய்யுளியலில் **132** ஆம் நூற்பா முதல் **137** ஆம் நூற்பா முடிய அகநிலையொத்தாழிசைக் கலியின் உறுப்புக்களின் அடியளவு கூறப்படுகின்றது. எனவே நச்சினார்க்கினியர் உரையில் காணப்படும் *"ஆறடி முதல் இரண்டடிகாறும் (தாழிசை) வரப்பெறும் என்று கொள்க"* என்ற விளக்கம் பொருத்தமற்றது. (ப.648)

> ***"ஒரு பொருள் நுதலிய வெள்ளடி இயலால்***
> ***திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே"*** (எண்.147)

எனும் நூற்பாவிற்கான நச்சினார்க்கினியர் உரையில், *"இதனை வெண்பாவெனிற் தொல்காப்பியனார் கலிவெண்பாப் பெருந்திணைப் பொருளின் வாராதென்று கொள்க"* எனும் முற்றுத் தொடர் ஒன்று வரக் காணலாம். இதனால் உரையாசிரியர் சொல்லும் கருத்து எதுவென விளங்க வில்லை (ப.762) என்று வெள்ளைவாரணனார் கூறுவார்.

செய்யுளியலில் எண்பது விழுக்காட்டிற்கு மேலான நூற்பாக்களுக்குப் பேராசிரியர் *தரும் சான்றுப்* பாடல்களே நச்சினார்க்கினியர் உரையிலும் தரப்படுகின்றன. பின்னவர் உரையில் மட்டும் காணப்பெறும் சான்றுப் பாடல்களுள் சில பொருத்தமற்றவையாய் உள்ளன.

> ***"அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்***
> ***இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்***
> ***மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"*** (எண்.202)

***அகன்று பொருள் கிடப்பச்*** செய்தற்கு,

> ***"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்...***
> ***வாரேன் வாழிய நெஞ்சே***
> ..............................................................

*வேலினும் வெய்ய கானமவன்*
*கோலினும் தண்ணிய தடமென் றோளே"*

(பட்டினப்பாலை 218–20, 300–301)

எனும் சான்றையும், ***அணுகிக் கிடப்பச்*** செய்தற்கு,

*"திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்*
*இறந்து படிற்பெரிதா மேதம் உறந்தையர் கோன்*
*தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்*
*கண்ணாரக் காணக் கதவு"* (முத்தொள்ளாயிரம் 642)

எனும் சான்றையும் முற்றும் பொருந்துவனவாகத் தருவார். இச்சான்று களையே தராமல், இந்நூற்பாவிற்குத் திருமுருகாற்றுப்படையிலிருந்து *"மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்"* எனும் அடியில் தொடங்கி, *"பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்"* ஈறாக முப்பத்து மூன்று அடிகளில் அகன்றும் அணுகியும் மாட்டுறுப்பு வருவதாகக் காட்டப் பட்டுள்ளது. இவ்வடிகளுக்குப் பொருள் கூறுதற்கு மாட்டிலக்கணத்தைக் கொண்டுவரத் தேவையில்லை. மாட்டிலக்கணம் நன்கறிந்த நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படையின் இப்பகுதியைச் சான்றாகக் காட்டியிருக்கமாட்டார்.

"*அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்*" (எண்.221)

என்னும் நூற்பாவிற்குப் பேராசிரியர் *"ஒருவழி நெடில் பயின்றும் ஒருவழிக் குறில் பயின்றும் அறுத்தொழுகியது அகைப்பு வண்ணம்"* என்று கூறி,

*"வாரா ராயினும் வரினும் மவர்நமக்*
*கியாரா கியரோ தோழி"* (குறுந்தொகை 110)

எனும் சான்றுப் பாடலைத் தருவார். நச்சினார்க்கினியர் உரையில் இப்பாடலடிகளோடு இன்னொரு பாடலும் தரப்பட்டுள்ளது.

*தொடுத்தவேம் பின்மிசைத் துதைபோந் தையிடை*
*யடுத்தவ ரருமலை யட்டுண் டுண்ண*
*லென்பா னியன்ற வேனை முயற்சி*
*யம்பகம்பு தானை யெதிர்முயன்ற வேந்த*
*ருயிர் முடிக்கும் வேலின் னவன்.*

***யாப்பருங்கல விருத்தி*** யிலிருந்து எடுக்கப்பட்ட இப்பாடல் இவ்வாறு இருக்குமானால் அது விட்டு விட்டுச் செல்லும் அகைப்பு வண்ணத்திற்குத்தக்க இலக்கியமாகாது. அது கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டுமென்று வெள்ளைவாரணனார் சுட்டிக் காட்டுவார்.

*"தொடுத்த வேம்பின்மிசைத் துதைந்த போந்தையிடை*
*அடுத்தவ ரருமலை யட்டுண் டுண்ண*
*ஆர்மலைப் பாட்டூர் அண்ண லென்பான்*
*இயன்ற சேனைமுர சிரங்குத் தானையெதிர்*
*முயன்ற வேந்தருயிர் முடிக்கும் வேலினவன்"* (ப.2004)

*"உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்"* (எண்.224)

எனும் நூற்பாவிற்குப் பேராசிரியர், "குற்றெழுத்துப் பயின்று வருதல் குறுஞ்சீர் வண்ணத்திற்கும் அராகத்திற்கும் பொருந்துமாயினும் குறுஞ்சீர் வண்ணம் நெகிழ்ந்த ஓசையதாய் வரும்; அதுபோல் இடையறவுபட நெகிழ்தலின்றி, விரைந்து உருள்வது போலும் ஓசையினதாதலின் அராகம் தொடுத்து வருவதாகிய இது உருட்டு வண்ணம் என்னும் பெயருடைய தாயிற்று," என்று விளக்கமளித்து,

*"உருமுரறு கருவிய பெருமழை தலைஇய"* (அகம்.158)

*"எரியுரு வுறழ விலவ மலர"* (கலி.33)

எனும் இரண்டு சான்றுப்பாடல்களையும் தருவார்.

நச்சினார்க்கினியர் பெயரில் உள்ள உரை பேராசிரியரின் விளக்கத்தை அப்படியே எடுத்துக்கொண்டு,

*"உருகெழு முருகிய முருமென வதிர்தொறு*
*மருகெழு சிறகொடு மணவரு மணிமயில்"*

எனும் பாடலடிகளைச் சான்றாகத் தருகிறது.

இங்கு இவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ள அராகவுறுப்பு ***"செஞ்சுடர் வடமேரு"*** என்னும் முதற்குறிப்புடைய இடையளவு அம்போதரங்க ஒருபோகிற்கு உரியதாகும்"(ப.1008) என்று வெள்ளைவாரணனார் தம் அடிக்குறிப்பில் கூறுவார்.

செய்யுளியல் நூற்பாக்களில் கீழ்க்கண்டவற்றிற்கெல்லாம் பேராசிரியர் தரும் சான்றுப்பாடல்கள் யாவும் நச்சினார்க்கினியர் உரையில் அவ்வாறே தரப்பட்டுள்ளன:

நூற்பா எண்கள் : 3, 4, 6, 7, 8, 9, 10, 12, 13, 14, 16, 17, 18, 19,21, 23, 25, 26, 28, 29, 30, 31, 33, 46, 47, 52, 53, 54, 55, 57, 59, 60, 61, 62, 65, 67, 68, 69, 73, 74, 76, 83, 88, 89, 90, 91, 92,93, 96, 100, 101, 104, 105, 108, 109, 110, 116, 117, 119, 120, 121, 126, 129, 132, 137, 140, 143, 144, 146, 147, 148, 149, 150, 153, 169, 170, 171, 172, 178, 179, 181, 182, 183, 184, 186, 187, 188, 190, 191, 192, 193, 194, 195, 196, 198, 199, 200, 201, 203, 211, 212, 213, 214, 215, 216, 217, 218, 219, 220, 221, 222, 223, 225, 227.

சில நூற்பாக்களுக்கு மட்டும் பேராசிரியர் தரும் சான்றுகளோடு ஓரிரு பிற்காலப்பாக்கள் நச்சினார்க்கினியர் உரையில் சேர்க்கப் பெற்றுள்ளன. பேராசிரியர் சான்றுகள் தராத நூற்பாக்களுக்குப் பெரும்பாலும் நச்சினார்க்கினியர் உரையிலும் சான்றுகள் கொடுக்கப்படவில்லை.

*"எண்வகை இயனெறி பிழையா தாகி*
*முன்னுறக் கிளத்த முடிவின ததுவே"* (எண்.197)

எனும் நூற்பாவிற்கு இளம்பூரணர், பேராசிரியர் உரைகளைத் தரும் வெள்ளைவாரணனார்,

"இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் உரை கிடைத்திலது, இவ்வியலில் பேராசிரியர் உரை***யினையே நச்சினார்க்கினியர் பெரிதும் தழுவி*** உரைவரைந் திருத்தலால் இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் வரைந்த வுரையே நச்சினார்க்கினியர்க்கும் உடம்பாடானதென்று கொள்க" (ப.958) என்று கூறுவார். *சொல்லாலும், பொருளாலும், சான்றுகளாலும்* பேராசிரியர் உரையைப் பெரிதும் ஒத்திருக்கும் உரைகளைக் கொண்ட நூற்பாக்கள் இரண்டோ, மூன்றோ அல்ல, ஏராளமானவை என்பதை வெள்ளைவாரணனாரின் அடிக்குறிப்புகளே புலப்படுத்தும். அவ்வாறு சுட்டப்பெறும் நூற்பாக்களின் எண்கள் வருமாறு:

**9, 20, 22, 24, 27, 28, 54, 62, 65, 66, 84, 86, 89, 105, 108, 123, 132, 134, 136, 137, 142, 149, 150, 151, 154, 168, 169, 177, 180, 183, 184, 187, 188, 195, 196, 198, 219, 226, 231, 232.**

செய்யுளியலுக்கு நச்சினார்க்கினியர் பெயரிலுள்ள உரையை இளம்பூரணர், பேராசிரியர் ஆகிய இருவருடைய உரைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பத்துப்பாட்டிற்கும் சீவக சிந்தாமணிக்கும் அரிய உரைகளைத் தந்துள்ள நச்சினார்க்கினியர் இச்செய்யுளியல் உரையை எழுதியிருக்க முடியாது என்பது தெளிவாகப் புலனாகும். நச்சினார்க்கினியர்பால் ஏதோ ஒரு காரணத்தால் பற்று மிகக் கொண்ட ஒருவர் அவ்வறிஞர் காலத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, பேராசிரியர் உரையை முன்வைத்துக் கொண்டு ஒரு சில இடங்களில் மாற்றங்களைச் செய்து நச்சினார்க்கினியர் உரையென்று வெளியிட்டிருக்க வேண்டும். இவ்வுரை நச்சினார்க்கினியர் பெயருக்கு ஊறு விளைவிக்கும் என்பதால் அதனை அறிஞர் உலகம் இனியும் அச்சேற்றாது புறக்கணித்தல் நன்று.

**துணை நூல் :**

க.வெள்ளைவாரணன், பதிப்பாசிரியர் ***தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்,*** மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1989.

# இருவகைச் செய்து வாய்பாட்டு வினைகள்

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி–605 008.
கைபேசி : 94431 51044

1. தமிழில் செய்து வாய்பாட்டுப் பொதுவினை முற்றுக்கள் (Impersonal Finite Verbs) இறந்த காலத்தையும் இறவாக் காலத்தையும் குறிப்பனவாகக் காணப்படுகின்றன. *காய்த்தல், கேட்டல், கற்றல்* ஆகிய இறவாக்கால வினைகள் *காய்த்து+அல், கேட்டு+அல், கற்று+அல்* என்ற அமைப்பினவாகும். செவ்வியல் தமிழில் நிகழும் *இழத்தும்* (குறள்.1250) 'இழப்போம்', *அடித்தும்* (சிலம்பு.29.22.3) 'அடிப்போம்', *அளித்தி* (பதி.79.3) 'அளிப்பாய்', *பூத்தி* (புறம்.242.6) 'பூப்பாய்', *ஒத்தி* (புறம் 8.6)'ஒப்பாய்', *கேட்டி* (அகம்.68.4) 'கேட்பாய்', *கேட்டிர்* (புறம். 188.10) 'கேட்பீர்' ஆகிய வல்வினை சார்ந்த இறவாக்கால வினைகள் முறையே *இழத்து+உம், அளித்து+இ, ஒத்து+இ, கேட்டு+இ/இர்* என்ற அமைப்பினவாகும். இதேபோல் காய்த்த, கேட்ட, கற்ற ஆகிய இறந்தகால வினைகள் காய்த்து+அ, கற்று+அ என்ற அமைப்பினவாகும். இரண்டிலும் நிகழும் செய்து வாய்பாட்டு வினைகள் அமைப்பு நிலையில் முற்றிலும் வேறுபட்டவையாகும்.[1]

2. செய்து வாய்பாட்டு வினைகள் இறந்தகாலத்திலும் இறவாக் காலத்திலும் வினைப்பகுதிக்கு ஏற்ப வடிவமைப்பில் மாறுபடும். சில வினைப்பகுதிகளைப் பொறுத்தவரையில் இரண்டு காலத்திலும் மேற்படி வாய்பாட்டு வினைகள் ஒரே வடிவினவாக இருக்கும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

| | ***இறந்தகாலம்*** | | ***இறவாக்காலம்*** |
|---|---|---|---|
| 1 | 1) சேர்த்து+ஆன்/அ | 2 | 1) சேர்த்து+அல் |
| | 2) கேட்டு+ஆன்/அ | | 2) கேட்டு+அல் |
| | 3) கற்று+ஆன்/அ | | 3) கற்று+அல் |
| | 4) மேய்த்து+ஆன்/அ | | 4) மேய்த்து+அல் |
| | 5) கொய்து+ஆன்/அ | | 5) கொய்து+அல் |

3
1) நடந்து+ஆன்/அ
2) சேர்ந்து+ஆன்/அ
3) மேய்ந்து+அது/அ
4) வாழ்ந்து+ஆன்/அ
5) கண்டு+ஆன்/அ
6) தந்து+ஆன்/அ
7) தின்று+ஆன்/அ
8) முயன்று+ஆன்/அ
9) வென்று+ஆன்/அ

4
1) நடத்து+அல்
2) சேர்து+அல்
3) மேய்து+அல்
4) வாழ்து+அல்
5) காண்டு+அல்
6) தருது+அல்
7) தினுது+அல்(=தின்னுதல்)
8) முயலுது+அல்(>முயறல்)
9) வெலுது+அல் (> வேறல்)

இந்த எடுத்துக்காட்டுக்களில் இறவாக்கால செய்து வாய்பாட்டு வினைகள் செயுத்து, செயுது வாய்பாட்டு வினைகளின் ஒடுக்கங்களாகும். இவற்றுள் செயுத்து வாய்பாட்டு வினைகள் வல்வினை சார்ந்தும் செயுது வாய்பாட்டு வினைகள் மெல்வினை சார்ந்தும் நிகழும். எடுத்துக்காட்டாக சேர்த்து, கேட்டு, கற்று ஆகிய இறவாக்காலப் பகுதிகள் முறையே *சேருத்து, *கலுத்து, *கேளுத்து ஆகியவற்றின் ஒடுக்கங்களாகும். மெல்வினை சார்ந்த இறவாக்கால செய்து வாய்பாட்டு வினைகள் செயுது வாய்பாட்டு வினைகளின் ஒடுக்கமாகும். கருதுக *காணுது > காண்டு, *தினுது > தின்று, *மேயுது > மேய்து *வாழுது > வாழ்து, சேருது > சேர்து, *உணுது > உண்டு. காண்டல், தின்றல், உண்டல் ஆகிய வடிவங்கள் காணுதல், *உணுதல் (= உண்ணுதல்), *தினுதல் (= தின்னுதல்) ஆகியவற்றின் ஒடுக்கங்களாகும்.

3. தொல்காப்பியம் *உம்உந் தாகும் இடனுமா ருண்டே* (சொல். சேனா.292) என்ற நூற்பாவின் மூலம் பழந்தமிழில் செயுந்து வாய்பாட்டு இறவாக்கால வினைமுற்றுக்களின் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. இந்த வாய்பாட்டு வினைகள் புறநானூற்றில் மட்டுமே பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றுக்கு இணையான செயுத்து வாய்பாட்டு வினைகளைப் பற்றிய குறிப்பு எதுவும் மரபிலக்கணங்களில் காணப்படவில்லை. செயுத்து வாய்பாட்டு வினைகளின் நிகழ்ச்சியைக் கன்னட இறவாக்கால வினைகளில் காணலாம். எ–டு. *ஆளுத்தானெ* 'ஆள்கிறான்', *கேளுத்தாளெ* 'கேட்கிறாள்', *ஒடுத்தாரெ* 'ஓடுகிறார்கள்'. இந்த வினைகளில் நிகழும் *ஆளுத்து, கேளுத்து, ஒடுத்து* ஆகியவை செயுத்து வாய்பாட்டினவாகும் இந்த வாய்பாட்டு வினைகள் செய்த்து வாய்பாட்டினவாகத் தொல்தமிழில் (Pre Tamil) ஒடுங்கி உம், இ, இர், அல் ஆகிய விகுதிகளை ஏற்றுச் செவ்வியல் தமிழில் நிகழ்வதை இழத்தும்,

பூத்தி, கேட்டி, ஒத்தி, கேட்டிர், காய்த்தல் முதலான[1] வினைகள் புலப்படுத்துகின்றன. இத்தகைய வினைகளும் அறிதும், அறிதி, அறிதிர், அறிதல் முதலான மெல்வினை சார்ந்த இறவாக்கால வினைகளும் இங்கே செய்து வாய்பாட்டு இறவாக்கால வினைகளின் அடியாகத் தோன்றியவையாக இந்த ஆய்வில் துணியப்படுகின்றன

4. வல்வினை சார்ந்த இறவாக்காலச் செய்து வாய்பாட்டு வினைகளின் காலப் பகுதியாகிய வினைகள செயுத்து வாய்பாட்டு வினைகளின் ஒடுக்கம் என்று முன்பே குறிப்பிடபபட்டது இநத வினைகளும் செயுத்து வாய்பாட்டு வினைகளும் அமைபபு நிலையில் ஒரு திறத்தனவாகும். செயுத்து வினைகள் **செய்+உத்து* என்ற அமைப்பினவாகும். இதேபோல் செயுந்து வாய்பாட்டு வினைகளும் **செய்+உந்து*[2] என்ற அமைப்பினவாகும் எனவே செயுநது, செயுத்து வாய்பாட்டு வினைகள் ஒருங்கிணைந்த ஆய்வுக்கு உரியனவாகும. இவற்றை எப்படி ஒருங்கிணைப்பது? *செயுந்த்உ வாய்பாட்டு வடிவத்தை மீட்டுருவாக்கம் செய்வதன் மூலம் இந்த ஒருங்கிணைபபனைச் செயல்படுத்த முடியும். இந்த வகையில் பின்வரும் புணர்ச்சி விதிகள் கருத்தில் கொள்ளற்பாலனவாகும்.

5. *செயுந்த்உ>செயுத்து (ந்>த்/–த்)

6 *செயுந்த்உ>செயுந்து (த்உ>து/ந்–)

முதல் விதியானது கன்னடத்தில் நிகழும் செயுத்து வாயபாட்டு இறவாக்காலப் பகுதிகளை (Non past bases) வருவிப்பதாகும தொல்காப்பியர் குறிப்பிடும் செயுத்து வாய்பாட்டு இறவாக்காலப பொதுவினைகளை இரண்டாவது விதி வருவிக்கும். இந்த இரண்டு விதிகளும் *இழத்தும், அளித்தி, பூத்தி, கேட்டி, கேட்டிர், காய்த்தல்* ஆகியவற்றை வருவிக்காது. இவற்றை வருவிக்க மேலே குறிப்பிட்ட முதல விதியின் தொடர்ச்சியாகப் பின்வரும் மூன்றாவது விதியைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

7 செயுத்து>செய்த்து (உ>$\phi$/–த்த்)

*இழத்தும், அளித்தி, பூத்தி, கேட்டி, கேட்டிர், காய்த்தல்* முதலானவற்றில இறவாக்காலப் பகுதியாக நிகழும் *இழத்து, அளித்து, பூத்து, கேட்டு, காய்த்து* ஆகியவை செயுத்து வாய்பாட்டு வடிவத்தைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு வருவிக்கப்படும்.

8. 1) *இழயுத்து>இழய்த்து (உ>ф/ய்–த்த்)

2) *இழய்த்து>இழத்து (ய்>ф/–த்த்)

இழத்து+உம்>இழத்தும் (குறள்.1250), 'இழப்போம்'

9 1) *அளியுத்து>அளிய்த்து (உ>ф/ய்–த்த்)

2) அளிய்த்து>அளித்து (ய்>ф/–த்த்)

1) அளித்து+இ>அளித்தி (பதி.79.3) 'அளிப்பாய்'

10 1) *பூயுத்து>பூய்த்து (உ>ф/ய்–த்த்)

2) பூய்த்து>பூத்து (ய்>ф/–த்த்)

பூத்து>இ>பூத்தி (புறம்.242.6) 'பூப்பாய்'

11 1) *கேளுத்து>கேள்த்து (உ>ф/–த்த்)

2) கேள்த்து>கேள்ட்டு (த்த்>ட்ட்/ள்–)

3) கேள்ட்டு>கேட்ட்டு (ள்>ட்/–ட்ட்)

4) கேட்ட்டு>கேட்டு (ட்>ф/ட்–ட்)

கேட்டு +இர்>கேட்டிர் (புறம்.388.10)

12 1) *மழியுத்து>மழிய்த்து (உ>ф/ய்–த்த்)

2) மழிய்த்து>மழித்து (ய்>ф)

மழித்து+அல்>மழித்தல் (குறள்.280)

5. *பறித்தும்* (=பறிப்போம்), *பறித்தி* (=பறிப்பாய்), *பறித்திர்* (=பறிப்பீர்), *பறித்தல்* ஆகிய வல்வினை சார்ந்த வினையமைப்புக்களில் நிகழும் *–தும், –தி, –திர், –தல்* ஆகிய பிறழ்பிரிப்பு விகுதிகளைப் படியெடுத்து மெல்லினப் பகுதிகளையடுத்துக் கொண்டு சேர்க்கப்படுவதன் மூலம் அறிதும், அறிதி, அறிதிர், அறிதல் ஆகிய இறவாக்கால வினைகள் பெறப்படுகின்றன.[3] அதனால்தான் செயுந்து வாய்பாட்டு வினைகளில் காணப்படும் நகர மெய் இத்தகைய மெல்வினையமைப்புகளில் நிகழ்வதில்லை. தொல்காப்பியர் தன்மைப் பன்மை விகுதியாகப் பிறழ்பிரிப்பின்மூலம் *–தும்* என்பதை இனங்கண்டதைப் போல் *–தி, –திர், –தல்* ஆகியவற்றை இனங்காணவில்லை. காரணம் *–இ,–இர்,–அல்* ஆகியவை வேறுவகை வினையமைப்புக்களில் இடம் பெறுவதுதான். ஆயினும்*–தும்* என்பதைப் போலவே *–தி, –திந்,–தல்* ஆகியவையும்

வல்வினை அமைப்புகளிலிருந்து படியெடுத்து, கொண்டு சேர்க்கப்பட்டவை என்பதே ஏற்புடையதாகும். இங்கே ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். பறித்தும், பறித்தி, பறித்திர், பறித்தல் ஆகியவை உண்மையில் *–உம், –இ, –இர், –அல்* ஈற்றனவாகவே கருதப்படும். தொல்காப்பியர் *–தி, –திர், –தல்* ஆகியவற்றைக் குறிப்பிடாததால் இவற்றில் நிகழும் தகரக் கிளவியை அவர் இறவாக்கால விகுதியாகவே கருதினார் என்பது போதரும். இதனின்றும் *–தும்* என்பதில் நிகழும் தகரக்கிளவியும் இறவாக்கால விகுதி என்பது தெள்ளிதின் விளங்கும்.

6. செய்து வாய்பாட்டு இறவாக்கால வினைகளின் உட்கட்டமைப்பினைத் தொடர்ந்து செய்து வாய்பாட்டு இறந்தகால வினைகளின் உட்கட்டமைப்பினை இனி ஆராயலாம். இந்த வகையில் *போயின்று, போயிற்று, போந்து* ஆகிய வினைகள் இங்கே கருத்தில் கொள்ளப்படும். போயின்று வாய்பாட்டு வினைகள் இக்காலத் தமிழில் வழக்கற்றுப் போய்விட்டன. ஆயினும் பழந்தமிழில் இவற்றின் நிகழ்ச்சி காணப்படுகின்றது. எ–டு. *போயின்று* (நற்.56.10, புறம். 380.16, கலி.24.17) *போந்து* என்ற வினையின் நிகழ்ச்சியும் செவ்வியல் தமிழில் மட்டுமே பதிவாகியுள்ளது. கருதுக: போந்து (நெடு.172, பரி.23.5, பரி.20.104, குறு.39.1, நற்.275.2) போயிற்று வாய்பாட்டு வினைகள் இன்றும் வழக்கில் உள்ளன. *போயின்றிலன், போயிற்றிலன், போந்திலன்* ஆகிய வினைகளில் நிகழும் *போயிற்று, போந்து* ஆகியவை பொது வினை முற்றுக்கள் ஆகும். *சுனைபாய்ந்து ஆடிற்றும் இலன்* (நற்.147.9), *பேணின்றோ விலமே* (அகம்.316.2), *புலவி, உட்கொண்டு ஊடின்றும் இலையே* (நற்.237.4,5) ஆகியவற்றில் நிகழும் *ஆடிற்று, பேணின்று, ஊடின்று* ஆகியவை பொதுவினைமுற்றுக்களாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு *போயிற்று, போயின்று* ஆகியவை பொது வினைமுற்றுக்களாகக் கொள்ளப் படுகின்றது. *போந்தென* (குறு.39.1. நற்.275.2) என்பதில் *போந்து* என்பது பொதுவினைமுற்றாகும். இவற்றுள் *போயின்று* என்பதில் துகர விகுதி ஒன்றன்பால் விகுதியாக நிகழத் தொடங்கிய நிலையில் *போயினன், போயினள், போயினர், போயின* முதலான வினைமுற்றுக்கள் வழக்கில் வந்தன. *போயின்று, போயிற்று* ஆகியவை பொதுவினை முற்றுக்களாக இனங்காணப்படுகையில் *போய்+இன்று, போய்+இற்று* எனவும் சிறப்பு வினைமுற்றுக்களாக (Personal finite verbs) இனங்காணப்படுகையில் *போய்–இன்+து, போய்–இன்+த்உ* எனவும் ஆராயப்படும்.

7. *போயின்று, போயிற்று, போந்து* ஆகிய மூன்று வாய்பாட்டுப் பொது வினைகளும் ஒருங்கிணைந்த ஆய்வுக்கு உரியவையாகும். இந்த வகையில் *போயின்று, போயிற்று* ஆகிய வாய்பாட்டு வினைகள் **போயின்ற்உ* வாய்பாட்டினவாக மீட்டுருவாக்கம் செய்யத்தக்கனவாகும். இதனின்றும் செய்து வாய்பாட்டினதாகிய போந்து என்பதும் பெறப்படும்.

*போயின்று, போயிற்று, போந்து* ஆகிய மூன்றும் **போயின்ற்உ* என்ற அடிநிலை அமைப்பிலிருந்து பின்வருமாறு வருவிக்கப்படும்.

13. *போயின்ற்உ>போயின்று (ன்ற்உ>ன்று)

14. *போயின்ற்உ>போயிற்று (ன்ற்உ>ற்று)

15 1) *போயின்ற்உ>போயின்று (ன்ற்உ>ன்று)

2) போயின்று>போயிந்து[4] (ன்ற்>ந்த்)

3) போயிந்து>போய்ந்து (இ>ϕ)

4) போய்ந்து>போந்து (ய்>ϕ/—ந்த்)

8. *அறிந்து, ஆண்டு, வென்று, பறித்து, கேட்டு, கற்று, சாய்ந்து* ஆகிய செய்து வாய்பாட்டு இறந்தகால வினைகள் எவ்வாறு பெறப்படும் என்பதை இனிக் காணலாம். இந்த ஆய்வோடு கன்னட வினைகளையும் தேவைப்பட்டால் கருத்தில் கொள்ளப்படும்.

16. 1) 1) *அறியின்ற்உ>அறியின்று (ன்ற்உ>ன்று)

2) அறியின்று>அறியிந்து (ன்ற்>ந்த்)

3) அறியிந்து>அறிய்ந்து (இ>ϕ/—ய்—ந்த்)

4) அறிய்ந்து>அறிந்து(தமிழ்) (ய்>ϕ/—ந்த்)

5) அறிந்து>அறிது(கன்) (ந்த்>த்)

அறிது+அனு >அறிதனு 'அறிந்தான்'

2) 1) *அறியின்ற்உ>அறியிற்று (ன்ற்உ>ற்று)

2) அறியிற்று>அறியித்து (ற்ற்>த்த்)

3) அறியித்து>அறிய்த்து (இ>ϕ/ய்—த்த்)

4) அறிய்த்து>அறித்து (ய்>ϕ/—த்த்)

5) அறித்து>அறித்உ (கன்) (த்த்>த்)

அறித்உ+அனு>அறித்அனு 'அறிந்தான்'

குறிப்பு : கன்னடத்தில் அறிதனு, அறித்அனு இரண்டும் ஏற்புடையவையாகும்

17. 1) 1) *ஆளின்ற்உ>ஆளின்று (ன்ற்உ>ன்று)

2) ஆளின்று>ஆளிந்து (ன்ற்>ந்த்)

3) ஆளிந்து>ஆள்ந்து (இ>ϕ/–ந்த்)

4) ஆள்ந்து>ஆள்ண்டு (ந்த்>ண்ட்/ள்–)

5) ஆள்ண்டு>ஆண்ண்டு (ள்>ண்/–ண்ட்)

6) ஆண்ண்டு>ஆண்டு(தமிழ்) (ண்>ϕ/ண்–ட்)

2) 1) *ஆளின்ற்உ>ஆளின்று (ன்ற்உ>ன்று)

2) ஆளின்று>ஆளிந்து (ன்ற்>ந்த்)

3) ஆளிந்து>ஆளிது(கன்) (ந்த்>த்)

4) ஆளிது+அனு >ஆளிதனு 'ஆண்டான்'

18. 1) *வெலின்ற்உ>வெலின்று (ன்ற்உ>ன்று)

2) வெலின்று>வெலிந்து (ன்ற்>ந்த்)

3) வெலிந்து>வெல்ந்து (இ>ϕ/-ந்த்)

4) வெல்ந்து>வெல்ன்று (ந்த்>ன்ற்/ல்–)

5) வெல்ன்று>வென்ன்று (ல்>ன்/–ன்ற்)

6) வென்ன்று>வென்று(தமிழ்) (ன்>ϕ/ன்–ற்)

19. 1) *பறியின்ற்உ>பறியிற்று (ன்ற்உ>ற்று)

2) பறியிற்று>பறியித்து (ற்ற்>த்த்)

3) பறியித்து>பறிய்த்து (இ>ϕ/ய்-த்த்)

4) பறிய்த்து>பறித்து(தமிழ்) (ய்>ϕ/-த்த்)

20. 1) 1) *கேளின்ற்உ>கேளிற்று (ன்ற்உ>ற்று)

2) கேளிற்று>கேளித்து (ற்ற்>த்த்)

3) கேளித்து>கேள்த்து (இ>ϕ/-த்த்)

4) கேள்த்து>கேள்ட்டு (த்த்>ட்ட்/ள்–)

5) கேள்ட்டு>கேட்ட்டு (ள்>ட்/–ட்ட்)

6) கேட்ட்டு>கேட்டு(தமிழ்) (ட்>ϕ/ட்–ட்)

2) 1) *கேளின்ற்உ>கேளின்று (ன்ற்உ>ன்று)

2) கேளின்று>கேளிந்து (ன்ற்>ந்த்)

3) கேளிந்து>கேளிது(கன்) (ந்>φ/—த்)/(ந்த்>த்)
கேளிது+அனு>கேளிதனு 'கேட்டான்'

3) 1) *கேளின்ற்உ>கேளிற்று (ன்ற்உ>ற்று)

2) கேளிற்று>கேளித்து(கன்) (ற்ற்>த்த்)
கேளித்து 'கேட்டது'

21) 1) 1) *கலின்ற்உ>கலிற்று (ன்ற்உ>ற்று)

2) கலிற்று>கலித்து (ற்ற்>த்த்)

3) கலித்து>கல்த்து (இ>φ/-த்த்)

4) கல்த்து>கல்ற்று (த்த்>ற்ற்/ல்–)

5) கல்ற்று>கற்ற்று (ல்>ற்/–ற்ற்)

6) கற்ற்று>கற்று(தமிழ்) (ற்>φ/ற்–ற்)

2) 1) *கலின்ற்உ>கலிற்று (ன்ற்உ>ற்று)

2) கலிற்று>கலித்து (ற்ற்>த்த்)

3) கலித்து>கலித்உ(கன்) (த்த்>த்)
கலித்உ>அனு>கலித்அனு 'கற்றான்'

3) 1) *கலியின்ற்உ>கலியிற்று (ன்ற்உ>ற்று)

2) கலியிற்று>கலியித்து (கன்) (ற்ற்>த்த்)

3) கலியித்து>கலியித்உ (கன்) (த்த்>த்)
கலியித்து/கலியித்உ 'கற்றது'

கன்னடத்தில் *கல், கலி* இரண்டும் துணைநிலை வழக்கினவாகும்.

22 1) *சாயின்ற்உ>சாயின்று (புறம்.127.6) (ன்ற்உ>ன்று)

2) சாயின்று>சாயிந்து (ன்ற்>ந்த்)

3) சாயிந்து > சாய்ந்து (தமிழ்) (இ>φ/ய்–ந்த்)

9. தமிழில் *ஆண்டு, வென்று, கேட்டு, கற்று* ஆகிய இறந்த கால வினைகள் *ஆள்+ந்து, வெல்+ந்து, கேள்+த்து, கல்+த்து* என வண்ணனை நிலையில் ஆராயப்படும். இவற்றில் கால இடைநிலைகளாக நிகழும் *–ந்த்–, –த்த்–*, ஆகியவற்றில் முதல் உறுப்பாகக் காணப்படும் நகர தகரங்களைப் பற்றி மரபிலக்கண ஆய்விலாகட்டும், இன்று வரை மொழியியல் ஆய்விலாகட்டும் ஏதும் பேசப்படவில்லை. இங்கே மேற்கொண்ட ஆய்வில் அவை *-*இன்ற்உ–* என்பதில் நிகழும் னகரத்தின் திரிபுகள் என்பது பெறப்படுகின்றது. இரண்டாவது உறுப்பாகிய தகரம் றகரத்தின் திரிபு என்பது தெளிவாகிறது. *-*இன்ற்உ–* என்பது *இன்+த்உ* என்ற அமைப்பினதாகும். இந்த அமைப்பில் *இன்* என்பது இறந்த கால விகுதியாகும். அப்படியானால் அதனை அடுத்து நிகழும் தகரத்தின் இலக்கணப் பொருண்மை யாது? இதே கேள்வி செயுந்து வாய்பாட்டுப பொதுவினைமுற்றுக்களில் நிகழும் தகரத்துக்கும் எழுகிறது சிறப்பு வினைமுற்றுக்களாக இனங்காணப்படுகையில் **செயின்ற்உ, செயுந்து* இரண்டிலும் நிகழும் தகரக்கிளவி ஒன்றன்பால் விகுதியாகக் கருதப்படும். ஆனால் பொதுவினைமுற்றுக்களாக நிகழ்கையில் இரண்டாவது உறுப்பாகிய தகரத்தின் இலக்கண நிலை என்ன? இது தொடர் ஆய்வுக்கு உரியதொன்றாகும்.

## அடிக்குறிப்பு

1. **காய்த்தல், கேட்டல், கற்றல்* ஆகியவை *தல்* ஈற்று வினைகளாக மரபு வழிப்பட்ட வண்ணனை ஆய்வில் கருதப்படும். இது பிறழாய்வின் விளைவாகும். இந்த ஆய்வில் தல் ஈற்றின் முன் நிகழும் கூடுதல் வல்லொற்றின் தோற்றம் இயல்பாக விளக்கப்படவில்லை. *காய்த்தல, கேட்டல், கற்றல்* ஆகிய வல்வினை சார்ந்த செய்தல் வாய்பாட்டு வினைகளின் கட்டமைப்பினை மரபு வழிப்பட்ட ஆய்வு விளக்க முற்படவில்லை.

2. செயுந்து வாய்பாட்டு வினைகள் சிறப்பு வினைமுற்றாக நிகழ்கையில் அவற்றில் நிகழும் துகரக் கிளவி ஒன்றன்பாற் பொருண்மையை உணர்த்தும். இந்த நிலையில் செயுந் என்பதில உள்ள –உந்– என்பது இறவாக்கால இடைநிலையாகச் செயல்படும். *உந்* என்பது உகரம் கெட்டு நகரமாகவும் யகரத்தை அடுத்து ஞகரமாகவும் நிகழும் ஞகரமாக நிகழ்கையில் அதன்முன் நின்ற யகரம் கெடும் இந்த இடைநிலையைத் தொடர்ந்து பிற இயைபு விகுதிகள் நிகழ்வதைப்

பழந்தமிழில் காணலாம். எ-டு *அறியுநம்* (அகம்.243.12), *அடுநை* (புறம் 36.1), அறியுநன் (நற்.44.5), *அறியுநர்* (குறி 4) / *அறிஞர்* (மது.481), *களையுநர்* (புறம்.68.2) / *களைநர்* (கலி.38.9, பதி 40 7) / *களைஞர்* (குறு.392.5, பெரு.213).

3. படியெடுத்தல்-கொண்டுசேர்த்தல் (Copying and Pasting) என்ற உத்தியின் மூலம் வல்வினை சார்ந்த *பறிக்க, பறிக்கின்று* ஆகியவற்றில் நிகழும் *க* என்னும் வியங்கோள் விகுதியும் *கின்று* என்னும் கால இடைநிலையும் *அறி* என்ற மெல்வினைப் பகுதியையடுத்துப் புணர்க்கப்பட்டு *அறிக, அறிகின்று* ஆகிய வடிவங்கள் வருவிக்கப்படுகின்றன இது *அறிதும்* என்பது ப*றித்தும்* என்பதினின்றும் மேற்படி உத்தியைப் பயன்படுத்திப் பெறப்பட்டது போன்றதாகும்.

4. கன்னடத்தில் *ஒன்று, கொன்று, பன்றி* ஆகியவை முறையே ஒந்து, கொந்து, பந்தி என நிகழும் *ன்ற்>ந்த்* என்பது இங்கே தொல்சந்தியாகக் கொள்ளப்படுகிறது.

## <u>சுருக்க விளக்கம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகம் | – | அகநானூறு | சொல் | – | சொல்லதிகாரம் |
| கலி | – | கலித்தொகை | நற் | – | நற்றிணை |
| கன் | – | கன்னடம் | நெடு | – | நெடுநல்வாடை |
| குறள் | – | திருக்குறள் | பதி | – | பதிற்றுப்பத்து |
| குறி | – | குறிஞ்சிப்பாட்டு | பரி | – | பரிபாடல் |
| குறு | – | குறுந்தொகை | புறம் | – | புறநானூறு |
| சிலம்பு | – | சிலப்பதிகாரம் | பெரு | – | பெரும்பாணாற்றுப்படை |
| சேனா | – | சேனாவரையம் | மது | – | மதுரைக்காஞ்சி |

✠✠✠✠✠✠✠✠

# இன்னா செய்யாமை

பேராசிரியா **மு.மணிவேல்,**
தமிழியற்புலத் தலைவர், (ப.நி ),
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை
கைபேசி . 98655 34622

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்"* என்கிறார் கணியன் பூங்குன்றனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இத்தமிழ்ப் புலவர் உலக மக்கள் அனைவரையும் உறவுக்காரர்களாக்கிப் பேசியிருக்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் *"அனைவரும் உறவினர்"* என்றே தம் ஆத்திச் சூடியைத் தொடங்குகிறார் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டும் மனம் வாய்க்கப பெற வேண்டும் என்பதையே இவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள

இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் வேண்டும். இவ்வின்பத்தை நல்லது செய்தும் தீயது விலக்கியும் பெறலாம். நல்லது செய்தால் நல்லதும், தீயது செய்தால் தீயதும் கிட்டும். நன்றும் தீதும் பிறர்தர வாரா. ஒருவரது பெருமைக்கும் சிறுமைக்கும் தத்தம் செயல்களே (கருமமே) காரணம்.

பிறருக்குத் தீங்கு செய்யக் கருதுவதும் தீங்கு செய்வதும் தமக்குத் தீங்கினைத் தந்துவிடும்.

***"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா***
***பிற்பகல் தாமே வரும்"*** வளளுவர் (குறள் 319)

***"முற்பகல் செய்யின் பிற்பகல் விழையும்"*** –ஔவையாா

(கொன்றைவேந்தன்)

*'கெடுவான் கேடு நினைப்பான்'* என்பது அனுபவப் பழமொழி மீனைப் பிடிக்கப் பாயும் சிச்சிலிப் பறவை சில வேளைகளில் சேற்றில் மாட்டிக் கொள்கின்றதல்லவா? இன்னா செய்த துரியோதனனும், இராவணனும் வீழ்ந்து போனார்களல்லவா?

*'நல்லது செய்யாவிடினும் தீயது செய்யற்க'* (நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்) என்கிறார் பழந்தமிழ்ப் புலவர்.

இனியன அல்லாத இன்னாதவற்றைச் செய்யாதிருப்பதற்கு எல்லா உயிர்களிடத்திலும் அன்பும் இரக்கமும் பரிவும் அருளும் வேண்டும். உலகில் மிகவும் மலிவான பொருள் அன்புதான்; அது தன்னைப் பெறுபவனுக்கும் வழங்குபவனுக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும் என்கிறார் இங்கர்சால். *'அன்பைப் பயிர் செய்பவன் அருளைக் கொய்வான்'* என்பது முதுமொழி.

அரச குலத்துச் சித்தார்த்தர் உலகத் தீமை கண்டும், கருதியும் துறவு கொண்டு புத்தராய், அன்பு எனும் அறிவை உலகத்தார்க்கு உபதேசித்து மக்கள் மனதில் நிலைத்திருக்கிறாரல்லவா? *'அன்பே சிவம்'* என்கிறார் திருமூலர். எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருப்பதோடு உயிர்க்கொலையும் கூடாதெனச் சமண, பௌத்த சமயங்களும் கூறுகின்றன.

***"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி***
***எல்லா உயிருந் தொழும்"*** (குறள்.260)

என்கிறார் வள்ளுவர்.

துன்பம் தருபவை எவற்றையும் எவ்வளவு சிறிதாயினும் யாருக்கும் எப்பொழுதும் செய்தல் கூடாது என்கிறார் வள்ளுவர். தன்னுயிர்க்கு இன்னாதவை எவை என அறிகின்றவன் பிற உயிர்களுக்கு அவற்றைச் செய்வது ஏன் என்றும் கேட்கிறார். ஆதலின் இன்னாதவை என உணர்ந்தவற்றைப் பிறர்க்குச் செய்தல் கூடாது என வற்புறுத்துகிறார். அதனால் பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதித் துணையாக இருத்தலே அறிவுடைமை ஆகும் என்கிறார்.

மனத்தூய்மை உடைய மாந்தர்கள் சிறப்புத் தரும் செல்வம் பெறினும் தமக்குத் துன்பம் செய்தவர்க்குத் துன்பம் நினைப்பதும், செய்வதும் இல்லை.

*'இன்னா செய்தார்க்கு அவர் வெட்கப்படும் படியாக நன்மை செய்துவிடுக'* என்பது குறள்.

**"*இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்*"** (குறள் 314)

**"*இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
*என்ன பயத்ததோ சால்பு*"** (குறள்.987)

விலங்கினங்களை வாட்டித் துயர் செய்வோர் நரகத்தில வீழ்வர் வாய்பேசா விலங்கினைக் கொல்வோன் வன்பேய் ஆவான் என்கிறார் வேதநாயகம் பிள்ளை பிறருக்குத் தீங்கு செய்பவனைத் திட்டி, அடித்துக் காட்டுக்கு ஓட்டுவது நன்று என்றும் கூறுகிறார்

மலரானது மணம் வீசி மக்களை மகிழ்விக்கிறது. மனிதா நீ நலம் புரிந்து மக்களை மகிழ்விப்பாயாக என்று வேண்டிக் கொள்கிறார் நியூட்டன்.

*'ஒரு மரத்தை மதிப்பிடுவது அதன் இலைகளால் அல்ல; அதன் கனிகளால்தான்'* - இது இலத்தீன் பழமொழி நற்செயல்கள்தான் மாந்தர்க்கு மதிப்புத் தரும்; மகிழ்வும் தரும். இன்னா செய்யாது இனியவை செய்து புகழ் பெறுவோம்.

✠✠✠✠✠✠✠✠

# வாசகர் கடிதம்

தமிழாகரர் **தெ. முருகசாமி**
புதுச்சேரி–9

வணக்கம்!

2017 ஏப்ரல் செந்தமிழ் இதழ் கிடைத்தது. அதன் தமிழ் மணம் அளப்பரியது செந்தமிழ்க் கருவூலமான நம் வணக்கத்திற்குரிய முதுமுனைவர் *இரா.இளங்குமரனாரின் 'தனக்குவமை இல்லாத் தனிப்பெருநூல்'*–என்ற தொடர் கட்டுரை இந்த இதழோடு நிறைவு பெறுவதையறிந்து ஏக்கம் கொண்டாலும் அடுத்த தொடராக ஆக்கம் நன்று வரும் என்ற எதிர்ப்பார்ப்புடன் உள்ள வாசகர்களுள் நானும் ஒருவன்.

எல்லாக் கட்டுரைகளும் சிறப்பே! அவற்றுள் தண்ணீருள் மிதக்கும் அடர்த்திமிக்க பனிக்கட்டிகளாக இரு பெரும் கட்டுரைகள் இலக்கண உணர்வுகளுடன் நெஞ்சை ஈர்த்தன.

1 உவமை நிலைக்களக் கட்டுரையில் முனைவர் செ வை சண்முகனார் விரிவாக எழுதும் போக்கில் *"சிறப்பில்தீரா"* என்ற தொல்காப்பியர் உணர்வைக் குறித்த விளக்கம் சிறப்பாக இருந்தது. உரையாசிரியர்களின் வழி விளக்கிய பாங்கு பெருமையாகும்.

சிறப்பு உயர்வுக்குப் பழந்தமிழ்த் தொடர்கள் காட்டப்பட்டாலும் பிற்காலத்திலும் அவ்வாறான உவமத் தொடர்கள் இருந்ததை ஒப்பிட்டுணர வாய்ப்பாக இருந்தன.

2. முனைவர் இரா.கோதண்டராமரின் *"உரை மரபும் மொழி மரபும்"*–கட்டுரையும் கனமானதாகும். அதில் வகரக்கிளவி நான்மறை ஈற்றது என்ற தொல்காப்பியர் கருத்தோடு கவ், வவ் என்ற இரண்டும் சேர அறுமொழி ஈற்றதாக உணர எழுதிய கருத்து நல்ல ஆய்வாக இருந்தது.

அதாவது *கௌ, வௌ* என்ற ஔகார இறுதிச் சொல் *கவ், வவ்* எனப் போலியாக ஆகாமல் உண்மையான நெருக்கடியில்லாத வகர ஈறு எனச் சுட்டியது சிறப்பே.

# தமிழில் ஒப்பியல் இலக்கிய, இலக்கண ஆய்வுகள்

முனைவர் **உ.கருப்பத்தேவன்,**
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசா பலகலைக்கழகம்,
மதுரை–625 021
கைபேசி 94435 71776

## முன்னுரை :

ஐரோப்பாவில் பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பழம்மரபு விரும்பிகளுக்கும் முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கும் இடையே கடுமையான மோதல்கள் தோன்றின. இதன் எதிர்வினையாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டின் இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஐரோப்பாவிலுள்ள உயர்நிலை மக்களின் ஆதரவும் செல்வாக்கும் கிடைத்தன. இதன் காரணமாகவும், புனைவியல் இலக்கிய வளர்ச்சியின் தாக்குரவாலும், **1749**இல் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியின் மறுமலர்ச்சிச் சிந்தனைகளாலும் வெளிநாட்டு இலக்கிய வடிவங்களுக்கு வரவேற்புக் கிடைத்தன. ஒருமைப்பாடுடைய இலக்கியச் சுவையும், பிறர் கருத்தை மதித்து ஏற்றலும், சமத்துவ உணர்வும், பிறநாட்டுப் பண்பாடு மற்றும் இலக்கியத் தொடர்பும், கருத்துப் பரிமாற்றங்களும் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் தோன்ற வழிவகுத்துக் கொடுத்தன. ஒருமைப்பாடுடைய இலக்கியச் சுவையும், பிறர் கருத்தை மதித்து ஏற்றலும், சமத்துவ உணர்வும், பிறநாட்டுப் பண்பாடு மற்றும் இலக்கியத் தொடர்பும், கருத்துப் பரிமாற்றங்களும் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் தோன்ற வழிவகுத்துக் கொடுத்தன இவையே ஒப்பியல் இலக்கியம் தோன்றுவதற்குரிய பின்புலங்கள் ஆகும் (Ulrich Weistein, Comparative Literature and Literary Theory - Survey and Introduction, London, 1973, pp 190-198) என்பர்

## ஒப்பிலக்கிய முன்னோடிகள் :

பிரெஞ்சு இலக்கியத்தில் வேரூன்றிய ஒப்பியல் இலக்கியத்திற்கு அமரேயும் (Amere), ஏபல் பிரான்கெயிசும் (Abel Francoies), வித்திட்டனர் அதனை வளர்த்த முன்னோடிகளில் பால்வான்தீகமும் பெட்சும் (Betz) முக்கியமானவர்கள் ஆவர். ஒப்பிலக்கியத்தை அமெரிக்காவில் அறிமுகப்படுத்தி உலகம் தழுவிய நிலையில் அதற்குச் செல்வாக்கைப் பெற்றுத் தந்தவர் சார்லஸ் எம்.கெய்லே (Charles M Geyley) என்பவர் ***(கு.பகவதி, செ.ஜான், லாரன்ஸ், தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு, பக்.12–13)*** ஆவார்.

'ஒப்பியல் என்பதே ஓர் ஆய்வுமுறை. அது அறிவியல் சார்ந்தது. அறிவியல் அந்தஸ்து பெற்றது. இலக்கிய ஆய்வை ஓர் அறிவியல் பரிசோதனையைப் போல நடத்தவும், மேலும் மேலும் திருத்தமுறச் செய்யவும் ஒப்பியல் இலக்கிய ஆய்வால் இயலும்'' (க.கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம் (1969), ப.43) என ஹிப்போலைட் தெயின் கருதியதாக க.கைலாசபதி குறிப்பிட்டுள்ளார்.

## பல்கலைக்கழகங்களில் ஒப்பிலக்கியத்துறை :

பல்கலைக்கழகங்களின் ஒப்புதலுடன் ஒப்பியல் இலக்கியம் தனியொரு துறையாகத் தொடங்கப்பட்டது ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சிக்கு வழிகாட்டியது. 1871இல் அமெரிக்காவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்தில் (Cornel University) முதன்முதலில் ஒப்பிலக்கியம் ஒரு பாடமாகத் தொடங்கப்பட்டது. ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் 1890இல் ஒப்பியல் இலக்கியத்திற்கு ஓரிருக்கை ஏற்படுத்தப்பட்டது. இன்று நூற்றுக்கணக்கான அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் ஒப்பியல் இலக்கியத் துறைகள் உள்ளன. 'பிரான்சு நாட்டின் முக்கியமான பல்கலைக்கழகங்கள் அனைத்திலும், செர்மனியில் ஏழு பல்கலைக் கழகங்களிலும், ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, ஹங்கேரி, யுகஸ்லோவிக்கியா, உருசியா ஆகிய நாடுகளிலுள்ள பெரும்பான்மையான பல்கலைக்கழகங்களிலும் ஒப்பியல் இலக்கியத் துறைகள் நிறுவப்பட்டுள்ளன' (Amiya Dev (Edr.), Comparative Literature (1989)p 80) என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் :

இந்தியப் பல்கலைக்கழகங்களில் மேற்கு வங்காளத்தில் ஜாதவ்ப்பூர் பல்கலைக்கழகத்தில் 1956இல் ஒப்பியல் இலக்கியத்துறை தொடங்கப் பட்டுள்ளது தமிழகப் பல்கலைக்கழகங்களில் இம்முயற்சி மேற் கொள்ளப்படவில்லை. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழியற்புலத்தின் ஒரு பிரிவிலும் ஆங்கிலத் துறையிலும், தெலுங்கு இலக்கியத்துறையிலும் ஒப்பியல் என்ற பெயர் இணைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இங்கு ஒப்பியல் இலக்கியத்தில் முதுகலை வகுப்பும் முழுநேர ஒப்பியல் ஆய்வுகளும் நடைபெறவில்லை 'ஒப்பிலக்கியம்' என்ற தாள் முதுகலைத் தமிழ், ஆங்கில இலக்கியப் பாடத்திட்டத்தில் ஒரு விருப்பப் பாடப்பிரிவாகவே உள்ளது.

## தமிழில் ஒப்பியல் ஆய்வு :

ஒப்பிலக்கிய ஆய்வுகளின் பண்பையும் பயனையும் தமிழில் முதன் முதலில் ஜி.யு.போப் என்பவரே விளக்கிக் கூறியுள்ளார் தமிழில் ஒப்பாய்வுக் களன்களையும் பரப்பையும் அடையாளம் காட்டியவர்களாக

வ.வே.சு.ஐயர்/ எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார், எஸ்.வையாபுரிப்பிள்ளை, என்.கே. சித்தாந்தா, ஜே.ஆர் மார் ஆகியோர் அறியப்படுகின்றனர். இவர்கள் தமிழ் இலக்கியங்கள் கிரேக்க இலக்கியங்களுடன் கொண்டுள்ள ஒற்றுமைகளையே சுட்டிக்காட்டினர். எனவே தொடக்ககாலத் தமிழ் ஒப்பிலக்கிய ஆய்வுகளெல்லாம் ஹோமரது இலியது, ஒடிசி ஆகிய கிரேக்கக் காப்பியங்களுடனும், ஏனைய கிரேக்க இலக்கிய வகைகளுடனும் ஒப்பிட்டே ஆய்வு செய்யப்பட்டன. அடுத்த நிலையில் தமிழில் அறிமுகமான ஆங்கில இலக்கியப் படைப்பாளிகளான ஜான் மில்ட்டன், ஷெல்லி, கீட்சு, பைரன் போன்றோர் பெருமளவில் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பிடப்பட்டனர்.

தமிழ்ப் படைப்பாளர்களில் மகாகவி பாரதியார் குறித்த ஒப்பிலக்கிய ஆய்வுகளே மிகுதி. கீட்சு, ஷெல்லி, வால்ட் விட்மன், தாகூர், வள்ளத்தோள், குமரனாசான் இன்னும் பிறமொழிக் கவிஞர்களோடு பாரதியார் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளார். ஒப்பிலக்கிய ஆய்வுலகில் இந்தியப் படைப்பாளர்களுள் இரவீந்திரநாத் தாகூரும் காண்டேகரும், வியாசரும் வால்மீகியும் முக்கியப் பங்கு பெற்றுள்ளனர். அண்டைய மொழிகளில் மலையாள இலக்கியப் படைப்பாளர்களுடன் தமிழ்ப் படைப்பாளிகள் மிகுந்த அளவில் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளனர். இந்த வகையில் தகழி சிவசங்கரன்பிள்ளை, கேவசதேவ், வள்ளத்தோள், குமரன் ஆசான் அகிய மலையாள இலக்கியப் படைப்பாளிகளும் அவர்களது படைப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

## ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சி :

**1960**களில் தமிழகப் பல்கலைக்கழகங்களில் ஒப்பிலக்கியம் விருப்பப் பாடமாகவும், கட்டாயப் பாடமாகவும் பாடத்திட்டங்களில் இடம்பெற்றன. அதன்பின்னர் ஒப்பிலக்கிய ஆய்வுகள் பல நிலைகளில் வளர்ச்சி பெற்றன.

உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குகளிலும், பல்கலைக் கழகங்களில் நடத்தப் பெற்ற தேசியக் கருத்தரங்குகளிலும் ஒப்பிலக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றன. தமிழ் ஒப்பிலக்கிய ஆய்வில் இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் க.கைலாசபதியின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது. அவர் பழந்தமிழ்ப் புறப்பாடல்களைக் கிரேக்க வீரயுகப் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து எழுதிய 'Tamil Heroic Poetry' என்னும் நூலாக வெளிவந்த ஆய்வு நூல் ஒப்பிலக்கிய ஆய்வில் ஒரு கலங்கரை விளக்காகும். அவர் ஒப்பிலக்கியத்திற்கு இலக்கணமாக *'ஒப்பியல் இலக்கியம்'* என்ற நூலையும் எழுதியுள்ளார் அவரது *'இரு மகாகவிகள்'* (பாரதியார் – தாகூர் பற்றிய ஒப்பிலக்கிய ஆய்வு) ஒப்பிலக்கிய ஆய்வாளர்களுக்கு ஒரு முன்னோடியான வழிகாட்டியாகும்.

ஒப்பிலக்கிய ஆய்வில் தவத்திரு சேவியர் தனிநாயகம் அடிகளார் எழுதிய 'Landscap Poetry in Tamil' என்னும் நூல்

ஒப்பிலக்கிய ஆய்வினை மேற்கொள்வோர்க்கு ஓர் அரிய கையேடு எனலாம். ஆங்கிலப் பேராசிரியர் கா.செல்லப்பன் இளங்கோவடிகள், மகாகவி பாரதியார், பாரதிதாசன் ஆகிய தமிழ்க் கவிஞர்களை ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ் ஆகிய மேலைநாட்டுக் கவிஞர்களோடு ஒப்பிட்டுள்ளார். தொல்காப்பியரின் நிலம் சார்ந்த இயற்கைப் பாகுபாடுகளை நார்த்ரோப் பிரையின் (Northrop Frye) இயற்கை குறித்த வகைப்பாடுகளுடன் கொள்கை அடிப்படையில் ஒப்பீடு செய்துள்ளார். அவர் தமிழின் தொன்மைமிக்க அகப்புறப்பாகுபாடு, உள்ளுறை, இறைச்சி ஆகியனவற்றின் சிறப்புக்களை ரெனிவெல்லக்கின் கோட்பாடுகள் மற்றும் சமஸ்கிருதக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இது கா.செல்லப்பன் தமிழ் ஒப்பிலக்கிய ஆய்விற்கு அளித்த பெருங்கொடை ஆகும்.

கடந்த பத்தாண்டுகளில் இந்திய மொழிகளில் நடைபெற்றுள்ள ஒப்பிலக்கிய ஆய்வுகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் தமிழில்தான் அதிகம் என்று தோன்றும். ஆயினும் வங்காளம், கன்னடம், மலையாள மொழிகளில் காணலாகும் ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சி தமிழில் இல்லை. தமிழில் நடைபெற்றுள்ள 80% ஒப்பிலக்கிய ஆய்வுகள்–ஒப்பிலக்கிய ஆய்வுகளே இல்லை. க.கைலாசபதி குறிப்பிடுவதைப் போலப் 'பெரும்பான்மையான ஒப்பிலக்கிய ஆய்வுகள் தமிழில் போலியானவை' (க.கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், ப.50) என்றே கருத வேண்டியுள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

- சமீப காலங்களில் ஒப்பிலக்கிய ஆய்வுகளைச் செய்ய விரும்புவோர் பெரும்பான்மையினர் முதுகலைப் பட்டம் பெற்றதும் மேலும் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அளவில் எந்தவித ஈடுபாடும் இல்லாமல் *'பட்டம் பெறுதல்'* என்ற நோக்கிலேயே ஆய்வு செய்கின்றனர். இத்தகைய ஆய்வாளர்களுக்கு ஒப்பிலக்கிய அறிவு முதுகலையில் கற்ற பாடம் என்ற அளவிலேயே உள்ளது. பாடத்திட்டம் 50 ஆண்டுகளாக எவ்வித மாற்றமும் இல்லாமல் அப்படியே உள்ளது.

- 1960களில் அச்சிடப்பெற்ற பார்வை நூல்கள் இன்று கிடைப்பதே இல்லை. ஆதலால் இன்னொரு நூலின் துணைநூற் பட்டியலைப் பார்த்துக் குறிக்கப் பெறும் ஆங்கில நூல்களின் பட்டியல்களில் பல தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆதலால் வேறு வழியில்லாமல் வணிக நோக்கில் கல்வித்தரத்தை அழித்துவரும் தமிழகப் பல்கலைக்கழகங்களின் அஞ்சல்வழிக் கல்வித் துறையினர் மிகவும் தரம் குறைந்த நிலையில் அச்சிடும் பாடக் குறிப்புக்களையே முதுகலை மாணவர்கள் பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர். அவற்றில் குறிக்கப்பட்டுள்ள வினா–விடைகளை மட்டுமே கற்கின்றனர். அதில் *'இலக்கிய ஒப்பீடு', 'ஒப்பிலக்கியம்', 'ஒப்பியல் இலக்கியம்'* என்பன குறித்த வரையறைகளே சரியாக இல்லை.

இவற்றைப் பயிலும் ஆய்வு மாணவர்களிடம் உண்மையான ஒப்பிலக்கிய ஆய்வை எதிர்பார்ப்பது கடினம்.

- முதுகலைத் தமிழ் இலக்கியத்திற்குரிய இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கொள்கை, ஒப்பிலக்கியம் ஆகிய பாடத்திட்டங்கள் ஒன்றாகவே உள்ளன. *'பிடித்தால் லட்டு விட்டால் பூந்தி'* என்ற நிலையில் பாடத்திட்டத்தின் தலைப்புக்களைத் தவிர, உள்ளடக்கப் பொருள்களில் சிறப்புக்கள் இல்லை. இவ்வாறே சமூக வரலாற்றுப் பின்புலங்களிலும் (இங்கிலாந்து போன்று) இலக்கிய வகைமைகளின் அடிப்படையிலும் தமிழ் இலக்கிய வரலாறுகள் எழுதப்படவில்லை. இலக்கியங்களின் வரலாறே இன்றுவரை வளர்ந்துள்ள ஒப்பிலக்கியக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக முதுகலைப் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.

- *'ஒப்பிலக்கியம்'* குறித்த அடிப்படை அறிவும் அக்கறையும் ஈடுபாடும் தொடர்பும் இல்லாதவர்கள் ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கு வழிகாட்டிகளாகச் செயல்படும் நிலையைத் தவிர்த்தால் உண்மையான ஒப்பிலக்கிய ஆய்வுகள் தமிழில் நிகழ வாய்ப்புண்டு.

## ஆய்வு இதழ்கள் வேண்டும் :

அண்மையில் வளர்ச்சி பெற்றுவரும் அறிவியல் துறைகளில் அது தொடர்பான ஆய்விதழ்கள் உடனுக்குடன் தொடங்கப்படுகின்றன. அவ்விதழ்கள் அத்துறைகளின் ஆய்வு வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றன. ஆதலால் தமிழகப் பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்பில் *'ஒப்பிலக்கியம்'* என்னும் ஓர் ஆய்விதழைத் தொடங்க வேண்டும். உலகம் தழுவிய நிலையில் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒப்பிலக்கிய ஆய்வுகள் குறித்தும், ஒப்பிலக்கியக் கொள்கைகளின் புதுவரவு குறித்தும், தமிழில் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒப்பிலக்கிய ஆய்வுகள் குறித்தும் உடனுக்குடன் அவ்விதழில் வெளியிட வேண்டும். இதனால் ஒரே தலைப்பில் பலர் ஆய்வு செய்யும் நிலையைத் தவிர்க்கலாம்.

- பல்கலைக்கழகங்களின் பதிப்புத்துறைகள் தரமான ஒப்பிலக்கியப் பாடநூல்கள், ஆய்வுகள் ஆகியன தமிழில் வெளிவரும் வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும்.

- ஒப்பிலக்கிய ஆய்விற்கென ஆண்டுதோறும் பயிற்சிப் பட்டறைகள் (Workshop) நிகழ்த்தினால் ஒப்பிலக்கிய ஆய்வை அறிவியல் முறையில் வளர்க்கலாம்.

+ இன்றைய தமிழ் ஒப்பிலக்கிய ஆய்வுகளில் காணப்படும் பெருங்குறைகள் பல. அவை ஒப்பீட்டிற்கான ஒப்புமைக் கூறுகள், அதற்கான காரணங்களைக் கண்டறிதல், ஒப்புமைகள் தோன்றக் காரணமாயிருந்த பின்புலங்களைப் புரிந்துகொள்ளத் தவறுதல், படைப்பாளிகளுக்கும் சூழலுக்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளாமை போன்றவற்றில் ஒப்பிலக்கிய ஆய்விற்குத் தேவையானவற்றைப் பின்பற்றாமையே. பட்டறைப் பயிற்சிகளின் வாயிலாக இக்குறைபாடுகளை நீக்கலாம்.

## ஒப்பிலக்கிய வளர்ச்சியில் மொழிபெயர்ப்புக்களின் பங்களிப்பு :

அறிவியல் வளர்ச்சி, உலக இலக்கிய வளர்ச்சி, ஒப்பிலக்கிய வளர்ச்சி நோக்கு, சமூக மாற்றத்திற்கு அடிப்படையான கருத்துப் பரிமாற்றங்கள் ஆகியனவற்றில் மொழிபெயர்ப்பின் பங்களிப்பே முதன்மையானது. ஐரோப்பாவின் தொடர்பு மொழியாக விளங்கிய இத்தாலியில் *'விவிலியம்'* (Bible) மொழிபெயர்க்கப்பட்டதால் கிறித்தவ சமய அடிப்படையான ஓர் ஒற்றுமை ஏற்பட்டது. ஹீப்ரு மொழிப் பேராசிரியரான *பெஞ்சமின் ஜோவாட்* என்பவரின் மொழிபெயர்ப்பே ***பிளேட்டோவை*** உலகறியச் செய்தது. ஏனைய இந்திய மொழிகளோடு ஒப்பிடும்போது தமிழில் தான் மொழிபெயர்ப்பு மிகவும் பின்தங்கியுள்ளது. இந்தி மொழிக்கு அடுத்த நிலையில் ஒரு மொழியின் வளர்ச்சிக்கென ஒரு பல்கலைக்கழகம் உட்பட (தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்) ஆறு நிறுவனங்கள் தமிழ்மொழி இலக்கிய, இலக்கண, ஆய்வு வளர்ச்சிக்கென உள்ளன. ஆயினும், மொழிபெயர்ப்பின் வளர்ச்சிக்குச் சிறப்புத் தரப்படவில்லை.

+ ஒப்பிலக்கியத் தோற்றம், வளர்ச்சி ஆய்வுகளில் மொழி பெயர்ப்பின் பங்களிப்பே மகத்தானது. ஆதலால் தமிழில் மொழிபெயர்ப்பு நூல்கள் தாரளமாகவும் ஏராளமாகவும் வெளிவருதல் வேண்டும்.

## ஒப்பிலக்கிய ஆய்வும் பல்துறை இணைவும் :

அன்றாட வாழ்க்கையைப் பல்வேறு நிலைகளில் பாதிப்புக்கு உள்ளாக்கிய அறிவியல், வாழ்க்கையின் விளைபொருளாகிய இலக்கியத்தையும் பெருமளவில் பாதித்துள்ளது. இன்றைய இலக்கியப் படைப்பு, போக்கு, நோக்கு, ஆய்வுகளில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. *'இலக்கியம் வாழ்க்கையின் திறனாய்வு', 'காலக் கண்ணாடி', 'வாழ்வின் பிரதிபலிப்பு'* என்பன போன்ற மாத்யூ ஆர்னால்டு போன்றோரின் விளக்கங்களைக் கடந்து, உருஷ்யத் திறனாய்வாளராகிய ***மிக்கேல் ஹேஸ்ல்ட்*** கூறுவதைப் போன்று, *'இலக்கியத்தின் பிரதிபலிப்பாகச் சமுதாயம் இயங்குகின்றது'*. இலக்கியத்தில் பல துறைகள் பின்னிப் பிணைந்துள்ளன. ஆதலால் இன்று ஓரிலக்கிய வகையை முழுமையாகப்

புரிந்து கொள்வதற்கே பல்துறை அறிவு தேவைப்படுகின்றது. *'சங்க இலக்கியத்தில் தோழி'* என்னும் பொருளில் ஆய்வு செய்வோர்க்கு சங்க இலக்கியப் பயிற்சியோடு உளவியல், சமூகவியல், மானிடவியல், நிலவியல் போன்ற பிறதுறை அறிவுக் கொள்கைகளோடு *'பெண்ணியக் கோட்பாடும்'* அவசியமாகின்றது.

தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வுகள் கிரேக்க இலக்கியத்துடன் தொடங்கி, இங்கிலாந்தின் ஆங்கில இலக்கியம் வரை சென்று, பின்னர் மீண்டும் இந்தியாவிற்குள் நுழைந்து, அண்டை மாநில இலக்கியங்களோடு மட்டும் தொடர்பு கொண்டு தமிழ் நாட்டிற்குள்ளேயே முடங்கிப்போன நிலையையே *'பாரதியும் பாரதிதாசனும் – ஓர் ஒப்பியல் ஆய்வு', 'பாரதியின் தேசியப் பாடல்களும், பக்திப்பாடல்களும் ஓர் ஒப்பியல் ஆய்வு'* என்னும் ஆய்வுப் பொருண்மைகள் காட்டுகின்றன. தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வு இந்நிலையில் இன்னும் பல நிலைகளில் வளர வேண்டும்.

**ஒப்பிலக்கிய ஆய்வுக் களங்கள் :**

கிரீம் சகோதரர்கள் உலகெங்கும் வழங்கப்பட்ட நீதிக்கதைகளைத் (Moral Fables) தொகுத்து, அவைகளிடையே காணப்பட்ட ஒற்றுமைகளையும், அவை பரவிய முறைகளையும், அவை தோன்றிய நாடுகளின் பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளையும், அந்நாட்டு மக்களின் நம்பிக்கைகளையும் புதிய பார்வையில் ஒப்பிலக்கிய ஆய்வின் வாயிலாக வெளியிட்டனர். தவத்திரு தனிநாயகம் அடிகளார் உரோமர் ஸ்டாயிக் சிந்தனைகளுடன் சங்க இலக்கியத்தையும் திருக்குறளையும் ஒப்பிட இயலும் என்றார். அவர் கிரீஸின் தொன்மைக்காலக் கவிதைகளுடன் ஔவையாரின் சமூக நீதிக்கருத்துக்கள் ஒப்பிடத்தக்கன என்றார்.

ஐதராபாத்திலுள்ள மத்திய ஆங்கில மொழிக் கல்வி நிறுவனத்தில் பணிபுரிந்த சூசிதாரு என்னும் பேராசிரியர், ஔவையார் உட்பட இந்தியப் பெண்பாற் புலவர் பலரை ஒப்பிட்டு ஒப்பிலக்கிய ஆய்வினை மேற்கொண்டு *'புதிய பெண்ணியக் கோட்பாடு'* ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

**தலித் சாகித்தியம் :**

இன்றைய இலக்கியச் சூழலில் *'தலித் சாகித்தியம்'* என்பது ஒரு புதிய எழுச்சியாக மராத்தியில் தொடங்கி, கன்னடத்தில் ஒரு சக்திமிக்க இலக்கிய வகையாக வடிவமைப்புப் பெற்றுள்ளது தமிழிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றிக் கொண்டிருக்கும் இவ்விலக்கிய வகையைச் சமூகவியல், வரலாற்றியல், அரசியல், பொருளியல், சமயவியல், உளவியல் அடிப்படைகளில் ஒப்பாய்வு செய்யும் தேவையும் வாய்ப்பும் இன்று உள்ளது. இலக்கியத்தின் நிலைக்களன் பண்பாடே. அப்பண்பாட்டில் காணப்படும் ஒற்றுமை பற்றிய ஒப்பியல் ஆய்வுகளால் பல உண்மைகளைத் தெற்றென வெளிப்படுத்தலாம்.

## ஒப்பியல் ஆய்வின் மீட்டுருவாக்கம் :

இந்தியாவின் வட மாநிலங்களில் குறிப்பாக உத்திரப்பிரதேசம், பீகார் போன்ற பகுதிகளில் தமிழகத்தின் கிராமப்புறங்களில் தொன்றுதொட்டுச் சிறுவர்களால் விளையாடப்பட்டு வரும் பல விளையாட்டுக்கள் எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே விளையாடப்பட்டு வருகின்றன. அங்கு *'கிட்டிப்புள்'* என்னும் தமிழர் விளையாட்டு *'குல்லி தண்டா'* என அழைக்கப்படுகின்றது. *'தண்டு'* என்பதே *'தண்டா'* என அழைக்கப்படுகின்றது. அம்மாநிலங்களில் தமிழர்களின் *'நொண்டி'* விளையாட்டை *'லங்கடி டாங்'* என்ற பெயரில் விளையாடுகின்றனர். *'லங்கடி'* என்பது நொண்டியையும், *'டாங்'* என்பது *'கால்'* என்பதையும் குறிக்கும். தமிழர்களின் *'கண்ணாமூச்சி'* அங்கு *'சுப்பம் சுப்பாயி'* என்ற பெயரில் விளையாடப் பெறுகின்றன. *'சுப்பம்'* என்பதற்கு *'மறைதல்'* என்பது பொருளாகும். அங்கு *'நாலுமூலதாச்சி'* என்னும் விளையாட்டு *'ஊங்சுகீச்'* என்ற பெயரிலும், *'ஊஞ்சல்'*, *'ஜீலா'*, *'பாண்டி'யாட்டம்*, *'ஸ்டாப்பு'* என்ற பெயரிலும் அழைக்கப்பட்டு விளையாடப்பட்டு வருகின்றன. இவைகளை நாட்டுப்புற ஆய்வாளர்கள் தரவுகளாகச் சேகரித்து நுணுக்கமாக ஆராய்ந்தால் ஒப்பிலக்கிய மீட்டுருவாக்கக் கொள்கையின் அடிப்படையில் பல உண்மைகளைத் தெளிவுபடுத்தலாம்.

## தமிழர்களின் பொங்கல் திருநாள் :

தமிழர் திருநாளான *'பொங்கல் விழா'* பல இந்திய மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும், வடிவ மாற்றம் செய்யப்பெற்றுப் பல பெயர்களில் பல நிலைகளில் கொண்டாடப்பட்டு வருகின்றன. வட மாநிலங்களில் கொண்டாடப்பட்டு வரும் *'சங்கராந்தி'* விழாவில் புத்தரிசியைப் பயன்படுத்திக் *'கிச்சடி'* செய்கின்றனர். பஞ்சாப் மாநிலத்தில் *'போகிப்'* பண்டிகையை *'லோடி'* (எரியவிடுதல்) என்ற பெயரில் கொண்டாடி வருகின்றனர். ஜப்பானில் பொங்கல் திருவிழாவினை *'கோஸ்கோகட்சு'* (Koshogatsu) என்ற பெயரில் கொண்டாடுவதாகச் சுசுமு ஒநோ (Susumu Ohno, World view and Rituals among Japanese and Tamils, Japan, 1985, p.20) என்பவர் குறிப்பிடுகின்றார். இவற்றை ஒப்பிட்டு ஆராயும் பொழுது ஒப்பாய்வால் வெளிப்படும் பொதுப்பண்புகளையும், நுண்ணிய வேறுபாட்டால் வெளிப்படும் சிறப்புப் பண்புகளையும் அறியலாம்.

## ஒப்பியல் ஆய்வுப் பார்வையில் உலகப் பெரும் காப்பியங்கள் :

ஒப்பிலக்கியப் பார்வை இலக்கியப் படைப்பாளிகளிடம் தொன்று தொட்டுக் காணப்படுகின்றது. மொழியாரய்ச்சி, அறிவியல் துறைகளில் சிறப்பாகப் பின்பற்றப்பட்ட ஒப்பியல் ஆய்வு இலக்கிய ஆய்வில் பயன்படுத்தப்பட்டது. அறிவியல் அளவைமுறை சார்ந்தது. ஒப்பாய்வு

காரணமாகப் பல புதிய இலக்கியக் கோட்பாடுகள் தோன்றியுள்ளன. மில்மன்பரியின் ஒப்பிலக்கிய ஆய்வு, ஹோமரின் காப்பியப் படைப்புக்கள் வாய்மொழி இலக்கியங்களின் தொகுப்பு என நிறுவியது. இதனால் உலகப் பெருங்காப்பியங்கள் அனைத்தும் வாய்மொழி இலக்கியங்களின் தொகுப்பு என்னும் புதிய கோட்பாடு உருவாக்கப்பட்டது. இந்திய மொழிகளில் தோன்றிய இராமாயணம், பாரதம் ஆகியனவற்றை இம்முறையில் ஆய்வு செய்யலாம்.

## தமிழில் மேற்கொள்ளப்பட்டுள்ள குறிப்பிடத்தகுந்த ஒப்பாய்வுகள் :

1956இல் சங்கர்ராஜுநாயுடு `Kambaramayana and Tulasiramayana - A Comparative Study' என்ற தலைப்பிலும், வீ.சச்சிதானந்தம், *'தி, ஜானகிராமனும் டி.எச். லாரன்சும் ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தில் என்.சந்திரகாந்த் முதலியார் `A Comparative Study of Tamil and Hindi Bhakti Literature' என்ற பொருளிலும், 1963இல் அலிகார் முசுலீம் பல்கலைக்கழகத்தில் மாலிக் முகமது `Influence of Alwars on Hindi Krishna Bakti Poets' என்ற தலைப்பிலும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நா.மெய்ப்பொருள் *'திருவள்ளுவர் காந்தியடிகளின் வாழ்க்கைக் கோட்பாடுகள் – ஓர் மதிப்பீடு'* என்ற தலைப்பிலும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் ஜி.மோகனரங்கசாமி, `The Contact Relationship and the mutual contribution of the Tamils and Telugus through the ages could be gleaned from the Tamil Literature' என்ற தலைப்பிலும், ஆக்ரா பல்கலைக் கழகத்தில் ராமேஸ்வரர் தயாளு அகர்வால் `A Comparartive Study of Ramacharita manas and Kambaramayanam' என்ற தலைப்பிலும், தில்லிப் பல்கலைக்கழகத்தில் விநித்தாபல்லா *'சிலப்பதிகாரம், பத்மாபத்– ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், ஜி.வில்லிபாய் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில், `Amutamalyata and Andal-A Study' என்ற தலைப்பிலும், கேரளப் பல்கலைக்கழகத்தில் கி.ர விஜயகுமாரி *'தமிழ், மலையாள நாவல்களில் பெண்கள் – ஓர் ஒப்பாய்வு'* என்ற தலைப்பிலும், 1967இல் ஆக்ரா பல்கலைக்கழகத்தில் என்.வி இராஜகோபாலன் `A Comparative Study of Tamil and Hindi Poetics' என்ற பொருளிலும், சென்னைப் பல்கலையில் இலட்சுமிநாதன் *'பாரதி, பைரன்'* கவிதைகளில் *'சமுதாய மறுமலர்ச்சி'* என்ற தலைப்பிலும், 1970இல் ஆக்ரா பல்கலைக்கழகத்தில் பி.ஆர். ஜெகந்நாதன் `Tamil Bhaktakavi Periyalvar and Surdas' என்னும் பொருளிலும் முனைவர் பட்டத்திற்காக ஒப்பாய்வுகளைச் செய்துள்ளனர்

தொடர்ச்சி அடுத்த இதழில்

## சங்கச் செய்திகள்

05.05.2017 அன்று பிறபகல் 1.30மணியளவில் க.த.திருநாவுக்கரசு அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளநிலை ஆய்வாளர் *சீ.தரண்யா* தமது உரையில் "க.த.திருநாவுக்கரசு அவர்கள் திருக்குறள் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பப் பெரும் முயற்சி மேற்கொண்டவர்; வரலாறு, கல்வெட்டு, மொழியியல், சமூகவியல், மானிடவியல், தத்துவம் போன்ற பல துறைகளிலும் வியத்தகு புலமை பெற்றவர்; நமக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களிடத்தில் பக்தி முறையாக அமைந்துவிட்டால் நாமும் வாழ்வில் *உயர்நிலையை எய்த முடியும்* என்பதற்குக் க.த.திருநாவுக்கரசு அவர்களின் வாழ்வு முன்னுதாரணம் ஆகும்; *'திருக்குறள் மணி'* என்னும் பட்டம் பெற்றவர்; ஒல்லும் வகையெல்லாம் தமிழ்ப்பணி ஆற்றிய இப்பெருமகனார் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் தமது இருக்கையிலேயே இன்னுயிரைத் துறந்து இறைவனடி சேர்ந்தார்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகக் க.த.திருநாவுக்கரசு அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

08.05.2017 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் மயிலை *சீனி வேங்கடசாமி அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில்* நடைபெற்றது. இளநிலை ஆய்வாளர் ப.பாலமுருகன் தமது உரையில் "அன்னைத் தமிழுக்கு ஆக்கப்பணி பல புரிந்து பெரும் பேராசிரியர்களும், பெரும் புலவர்களும் போற்றும்வண்ணம் வாழ்ந்த இன்தமிழ் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி ஆவார் என்றும், தமிழின் மேல் ஆறாக்காதல் கொண்டவர் என்றும், ஒரு பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய தமிழ்ப்பணியைத் தனியொரு மனிதராகவே நின்று ஆற்றியவர் என்றும் கல்வெட்டுகள் இருக்கும் இடங்களுக்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து அரிய செய்திகளைத் தமிழுலகிற்கு வழங்கிய தண்டமிழ்ப் புலவர் என்றும் எண்ணற்ற தமிழ் நூல்களை எழுதித் தமிழன்னைக்குக்

காணிக்கையாக்கியவா" என்றும் குறிப்பிட்டார் இநநிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப பேராசிரியாகள், நூலகா மறறும மாணவர்கள் கலந்து கொண்டனா முனனதாக மயிலை சீனி வேங்கடசாமி அவாகளின் திருஉருவப் படத்திறகு மாலை *அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.*

20.05.2017 அன்று மதுரை, நானகாம் தமிழ்சசங்கததில் கனடா நாட்டைச் சேர்ந்த தமிழ இலக்கியத் தோடடம எனற இலக்கிய அமைப்பு சார்பாகத் "தமிழ் இலககியச சாதனை விருது" முதுமுனைவா தமிழறிஞர் இரா இளங்குமரனாருக்கு வழஙகும விழா நடைபெறறது. நான்காம் தமிழ்ச்சங்கததின் செயலாளா வழககறிஞர் திருமிகு ச மாரியப்பமுரளி அவர்கள அனைவரையும் வரவேற்றா சங்கத்தின் தலைவர் மாட்சிமை தஙகிய முகவை மன்னர் நா குமரன் சேதுபதி அவர்கள் விழாத் தலைமை ஏற்றார் கனடா தமிழ் இலககியத் தோட்டம் திரு.செ.இரா செல்வக்குமாா அவர்கள் தமிழறிஞா இரா இளங்குமரனார் அவர்களுககுத் தமிழ் இலககியச் சாதனை விருதும ரூ.50,000/- பொற்கிழியும் வழங்கி இளங்குமரனாரின் தமிழ்ப் பணி குறித்து உரையாறறினா அப்போது இளங்குமரனாா சொல் நயம், சொல் வீச்சு நிறைந்தவர் நான் விரும்பிய நூல்களில் முதன்மையானது இளஙகுமரனாரின் நூல்களே ஆகும, விக்கிபீடியாவில் தமிழ் மொழி மிகச் சிறபபாக வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்ட *அவர், மேலும்,* தொழிலநுடபம் மூலம் தமிழை வளர்கக முடியும் என்றும் அவர்தம் உரையில் குறிப்பிட்டார். தொடர்ந்து நடந்த வாழ்த்தரங்கில் வகபு வாரியக கல்லூரியின் தமிழத்துறைத் தலைவர் *முனைவர் கா சாகுல்அமீது அவர்கள தனது* வாழ்ததுரையில் தமிழ்ச சங்கம் செம்மொழிக்காகக குரல் கொடுத்த முதல இடம எனறும இங்குப் பல மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்டுளளன எனறும், இளங்குமரனார் மிகச் சிறப்பாகச் சொல் ஆராய்ச்சி செயயககூடியவர் எனறும் 5ம வகுப்பு வரை தமிழ் மொழி கற்பித்தல கட்டாயமாக இருகக வேண்டும் என்று தொடாந்து வலியுறுத்தி வருபவர் இளங்குமரனார் என்றும தனித்தமிழ இயககததின் முன்னோடிகளில் இளங்குமரனார் ஒருவரே இனறும நம்முடன் உளளாா எனக குறிப்பிடடார் புரட்சிக கவிஞா

## ஜூலை திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்


கு. அழகிரிசாமி
(5, ஜூலை 1970)


மயிலை சிவமுத்து
(6, ஜூலை 1968)


வேதநாயகம் பிள்ளை
(11, ஜூலை 1889)


இரா. இராகவையங்கார்
(11, ஜூலை 1948)


சுவாமி விபுலானந்தர்
(19, ஜூலை 1947)


சுப்பிரமணிய சிவா
(23, ஜூலை 1925)


திரு. நாராயண ஐயங்கார்
(23, ஜூலை 1947)


கோவிந்தசாமி
(31, ஜூலை 2003)


பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**


**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month


# செந்தமிழ்க் கல்லூரி



**நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை**

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.
54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


**Book Post**

அனுப்புநர்,
**செயலாளர்,**
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
**THE SECRETARY,**
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001.
Tamilnadu.

பெறுநர் / To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. 0452 - 2343707
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு. மதுரை – 625 020. அலைபேசி : 94874 45403

அச்சிட்டோர்: **சிறீ அச்சகம்** 147, கீழவெளி வீதி, மதுரை–1.
அலைபேசி : 97894 95738